விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 11 திங்கட்கிழமை (23.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

## விசுவமடு பகுதியில் 30 ஆயிரம் சடலங்கள்

### இறுதி யுத்தத்தில் நடந்தவை இனப்படுகொலையே - மன்னார் ஆயர்



(மன்னார்) இறுதிக்கட்ட யுத்தத்தின்போது விசுவமடுவுக்கு அருகே 30 ஆயிரத்திற்கும் அதிகமான சடலங்கள் ஒரே இடத்தில் இருந்ததாக தமக்கு சமீபத்தில் தெரியவந்ததாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் தெரிவித்துள்ளார். இது இனப் படுகொலைக்கான சான்றே என்றும் அவர் கூறினார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸவின் உறுப்புரிமை ரத்து



(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின்முன்னாள் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவின் கட்சி உறுப்புரிமை உடனடியாக

23ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அமைச்சரவையில் 30 அமைச்சர்கள் !

(கொழும்பு)
அரசியல் அமைப்புத் திருத்தங்களின் பின்னர் ஆட்சியமைக்கும் அரசாங்கத்தின் அமைச்சரவையின் எண்ணிக்கை 30 ஆக குறையும் என்ற யோசனை தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இணக்கம் இன்னும் கிடைக்கவில்லை என தெரியவருகிறது.

அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கை 30 எனவும் பிரதியமைச்சர்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா - அரசாங்கம் அடுத்த மாதம் பேச்சு

(கொழும்பு)
இலங்கை மீது முன்வைக்கப்படுகின்ற யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து, ஐக்கிய நாடுகள் சபைக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்று அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

அசோசியட் பிரஸ் இணையத்தளம் இதனைத் தெரிவித்துள்ளது.

அடுத்த மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகின்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாநாட்டின் நிமிர்த்தம், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனீவா

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கான தூதுவரை நியமித்தது அமெரிக்கா




(கொழும்பு)
தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் அதுல் கெசாப் இலங்கைக்கான புதிய அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையின் அமெரிக்கத்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஈழம் உருவாகுவதற்கு இடமளிக்கப் போவதில்லை

### ரணில் திட்டவட்டம்



(கொழும்பு)
எமக்கு புலிச்சாயம் பூசும் தரப்பினர்களின் கைக்குள்ளே கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன், கருணா போன்றோர் உள்ளனர்.

ஈழம் உருவாகுவதற்கு நாம் இடமளிக்கப் போவதில்லை. அதற்குத் துணை போவதாக எம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஒருபோதும்

24ஆம் பக்கம் பார்க்க....

## புதுடில்லி சென்ற ஜனாதிபதியை சந்தித்தார் சவேந்திர சில்வா

(கொழும்பு)
இந்தியாவுக்கு அண்மையில் அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை போர்க் குற்றவாளிகளில் முக்கியமானவராக குற்றஞ்சுமத்தப்பட்டுவரும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா சந்தித்துப் பேசியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதுடில்லியில் உள்ள ஜரிசி மௌரியா செரட்டன் விடுதியில் தங்கியிருந்த போது, எதிர்பாராத வகையில் அங்கு சென்ற மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அவரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினார்.

ஐ.நாவுக்கான துணைத் தூதுவராக முன்னர் பணியாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, புதுடில்லியில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியில்

24ஆம் பக்கம் பார்க்க....

## கல்வியமைச்சர் யாழ்.விஜயம்

(கொழும்பு)
கல்வி அமைச்சர் வேலுசாமி ராதாகிருஸ்ணன் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திற்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்போது 26 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப கூடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

அன்று முற்பகல் 11.00 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயதர்ர பாடசாலையில்

## சுதந்திரதின நிகழ்வில் கொலைச்சதி அம்பலமானதால் எச்சரிக்கை !

### அணிவகுப்பில் தாக்க முயற்சியிருந்ததாம்

(கொழும்பு)
சுதந்திரதின நிகழ்வில் அரசாங்கத்தின் தலைவர்களைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் குறித்து முன்னரே புலனாய்வுத்தகவல் கிடைத்ததால், அதனைத் தடுப்பதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இம்மாதம் 4 ஆம் திகதி கொண்டாடப்பட்ட சுதந்திரதின நிகழ்வுக்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு படைத்துறைச் செயலாளர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்கவால் ஒரு புலனாய்வு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே இடம்பெறவுள்ள படையினரின் அணிவகுப்பில் அரச தலைவர் ஒருவர் அல்லது தலைவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகும் வாய்ப்பிருப்பதாக இந்தப் புலனாய்வு அறிக்கை தெரிவித்

23ஆம் பக்கம் பார்க்க....



கோப்புப்படம்

## வீரவன்சவின் மனைவி கைது

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல்வீரவன்சவின் மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

மாலபே பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இவரைக் கைதுசெய்துள்ளதாக பொலி

23ஆம் பக்கம் பார்க்க....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா விசாரணை அறிக்கையை ஒத்தி வைத்தமை மிகவும் ஆபத்து

## தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழு இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதை 6 மாதங்களுக்கு ஒத்திவைத்திருப்பது மிகவும் ஆபத்தான நிலைமை என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.**

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் இதனை கூறியுள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் ஹுசைன் எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை அறிக்கையை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கவிருந்தார்.

தற்போது அறிக்கை சமர்பிக்கப்படுவது 6 மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமையவே அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் பிரிவினைவாதம் தலைதூக்குவதை தெளிவாகக் காண முடிந்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்கு அமைய வடக்கு மாகாண ஆளுநராக இருந்த ஜீ.ஏ. சந்திரசிறி நீக்கப்பட்டுள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்களும், அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டுள்ளன. மாங்குளம் பொலிஸ் பிரிவு நீக்கப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் தாம் எண்ணியது போல் வடக்கில் மீன் வளத்தை கொள்ளையிட்டு வருகின்றனர். கடற்படையினர் அதற்கு எதிராக தற்போது செயற்படுவதில்லை.


வடக்கில் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. காட்டுப் பன்றிக்கு வைக்கப்பட்ட பொறி வெடி என அதிகாரிகள் அதனை கூறுகின்றனர்.

தமிழ்நெட் இணையத்தளத்திற்கு விதிக்கப்பட்டிருந்த தடைநீக்கப்பட்டுள்ளது. பிரபாகரனின் பேட்டி அடங்கிய புறொண்ட்லைன் சஞ்சிகை இலங்கையில் தடையின்றி எங்கும் விநியோகிக்கப்படுகிறது.

அரசசார்பற்ற நிறுவனங்கள் வடக்கில் தாம் விரும்பியவாறு செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரகம் பகிரங்கமாக வடக்கில் அரசியலில் ஈடுபடுகிறது.

இதுதான் நல்லாட்சியின் கீழ் ஏற்பட்டுள்ள பிரிவினைவாதத்தின் மாற்றம் எனவும் மொஹமட் முஸ்ஸாமில் கூறியுள்ளார். (எ-1)



புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்ற இல்லத்திற்கு வெற்றிக் கேடயம் வழங்கி வைக்கப்படுகின்றது.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சுற்றுலாத்துறையும் விடுதி முகாமைத்துவமும் (Certificate in Tourism and Hotel Operations) குறுகிய காலக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 18 வயதைப் பூர்த்தி செய்த அனைவரும் இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க முடியும். இக் கற்கைநெறியானது மூன்றுமாத காலங்களைக் கொண்டுள்ள நிலையில் இக் கற்கைநெறிக்குரிய அனைத்து வகுப்புக்களும் பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய நிலையத்தில் இணைய வழிவரு கற்கைநெறியாக நடத்தப்படும். விண்ணப்பப் படிவங்களை 22.02.2015 தொடக்கம் 02.03.2015 வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)

# கிழக்கு மாகாண சபையில் அமைச்சர்கள் இன்னமும் இல்லை

### உறுப்பினர்கள் போர்க் கொடி

கிழக்கு மாகாண சபைக்கு அமைச்சர்களை நியமிக்காமல் இருப்பதன் ஊடாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காணப்படாத பட்சத்தில் தீர்க்கமான அரசியல் தீர்மானமொன்றை எடுக்கவுள்ளாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைக்கு புதிய முதலமைச்சரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய தீர்வை வழங்காத பட்சத்தில் எதிர்வரும் 72 மணித்தியாலங்களில் மாற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக மாகாண சபையின் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர் டபிளியு.டி.வீரசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய முதலமைச்சர் நியமிக்கப்பட்டு 13 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மாகாண சபையின் அமைச்சர் குழாம் இதுவரை பெயரிடப்படவில்லை.

இதன்காரணமாக கிழக்கு மாகாணத்தின் பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முதலமைச்சர் நியமிக்கப்பட்டமை தொடர்பாக எந்தவித பிரச்சினையும் இல்லாத போதிலும், அமைச்சர்கள் நியமிக்கப்படாமையால் நெருக்கடி தோன்றியுள்ளது.

இதன்காரணமாக அரசாங்கத்தினால் கிழக்கு மாகாண சபைக்காக ஒதுக்கப்பட்ட நிதியை செயற்றிட்டங்களில் ஈடுபடுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதிகாரிகள் தமது பணிகளை மேற்கொளவதற்கு அமைச்சர்களின் அனுமதியை பெற முடியாத நிலையில் உள்ளனர்.

மாகாண கல்வியமைச்சுக்கான அமைச்சர் ஒருவர் இல்லாத நிலையில், ஒருசில அரசியல் தலைவர்கள் தமது விருப்பத்திற் கிணக்க ஆசிரியர் இடமாற்றங்கள் உள்ளிட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதாகவும் மாகாண சபையின் சுதந்திர கூட்டமைப்பு உறுப்பினர் டபிளியு.டி.வீரசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் பின்னர் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவி கைமாற்றப்பட்டதுடன், சிறிலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்திய நஜீட் ஏ மஜீட்க்கு பதிலாக, முஸ்லிம் காங்கிரஸின் நஷீர் அகமட் தெரிவு செய்யப்பட்டார். (எ-1)

# சிங்கப்பூர் அமைச்சர் சண்முகம் வருகை

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் இன்று இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் 26-ம் திகதி வரையில் அவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலருடன் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆகியோரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-1)


**31ஆம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்**

**அமரர் கி.இலட்சுமி**

பிறப்பு 19 - 06 - 1931

இறப்பு 24 - 01 - 2015



திதி:-2015.02.23

*கண்ணீருக்கு தடை போட்டது போல*
*உம் நினைவுகளுக்கு தடைபோட முடியவில்லை*
*நினைவுகள் மட்டும் நிறையவே தந்துவிட்டு நீர் எங்கு சென்றீரோ!*

இன்று 23.02.2015 திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தவற விட்டவர்களும் இவ்வழைப்பை ஏற்றுக் கொள்ளவும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி-வடக்கு.

தகவல்:- குடும்பத்தினர்.

(9587)


# 18 ஆயிரம் படைவீரர்கள் படைப்பிரிவுகளுக்கு அனுப்பிவைப்பு

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தினால் பல்வேறு தொழில்களில் ஈடுபடுத்தப்பட்ட 18 ஆயிரம் படை வீரர்களை மீண்டும் அவர்களது படைப் பிரிவுகளுக்கே திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

படைவீரர்களின் கௌரவத்தை பாதிக்கும் பணிகளில் அவர்களை ஈடுபடுத்துவதில்லை என்ற தேர்தல் வாக்குறுதிக்கு அமையவே இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

முன்னைய அரசாங்கம் 18 ஆயிரம் படை வீரர்களை பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் வேலைக்கு அமர்த்தியிருந்தது. அவர்கள் கூலித் தொழிலாளர்களின் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

அவர்களுடைய வேலையை பாதுகாப்பதும், அவர்களுடைய சேவையை முன்னைய அரசாங்கம் போன்று துஸ்பிரயோகம் செய்யாமலிருப்பதுமே புதிய அரசாங்கத்தின் நோக்கம். அதன் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவ்தாக நகர அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் தினேஸ் கன்கண்ட தெரிவித்துள்ளார்.

எனினும் தொழில்நுட்ப தரத்தில் பணியாற்றிய படையினரை தொடர்ந்தும் வைத்துக்கொண்டு ஏனையவர்களை திருப்பி அனுப்பவுள்ளோம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-1)

### அல்லைப்பிட்டியிலிருந்து நேற்று வெட்டுக் காயங்களுடன் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி பகுதியில் இருந்து வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கபட்டு நேற்று இரவு யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டி 1-ம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவலிங்கம் (வயது 57) என்பவரது சடலமே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். நேற்றிரவு சம்பவ இடத்திற்குச் சென்ற ஊர்காவற்றுறைப் பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். (எ-1)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(சுதுமலை)

சுதுமலை ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து எதிர்வரும் 04ம் திகதி புதன் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் மேலும் தகவல் பரிமாற்றம்!

கடந்த ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் பில்லியன் டொலர் கணக்கிலான பணம் தொடர்பிலான ஆய்வுகளை மேற்கொள்ள நிதி புலனாய்வு பிரிவை நிறுவுவது குறித்து இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் மேலும் தகவல்கள் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

குறித்த நிதி புலனாய்வு தகவல் பிரிவை நிறுவுமாறு அண்மையில் இலங்கையின் புதிய அரசாங்கம் புதுடில்லியிடம் வேண்டுகோள் விடுத்தது. இதன்படி இது குறித்து மேலும் தகவல்கள் பரிமாற்றப்பட்டுள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. மேலும் இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது இது குறித்து கலந்துரையாடப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. ஹொங்காங், கெமன் மற்றும் சீசெல்ஸ் போன்ற வரி அறவிடாத வங்கிகளில், கடந்த ஆட்சிக்காலத்தில் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாக, ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது, இந்த நாட்டு அதிகாரிகளிடம் தகவல் பரிமாற்றப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனவே இது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் மற்றும் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய செய்திகள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

## ஐ.நாவுக்கு ஆதரவு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சமர்ப்பிக்கப்படவிருந்த, இலங்கை குறித்த அறிக்கை பிற்போடப்பட்டமைக்கு, ஐ.நாவின் உறுப்புரிமை கொண்ட சில நாடுகள் ஆதரவளித்துள்ளன.

இலங்கையின் புதிய அரசாங்கத்திற்கு இது குறித்து கால அவகாசம் வழங்க வேண்டும் என அந்த நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

யுத்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணை அறிக்கை அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

எனினும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் முயற்சியின் பலனாக அந்த அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை பிற்போடப்பட்டுள்ளது. (இ)

## கொள்ளைக் கும்பல் அத்துருகிரியவில் கைது

அத்துருகிரிய பகுதியில் ஆயுதங்களை பயன்படுத்தி பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 7 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த சந்தேக நபர்களிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கி மற்றும் 30 தோட்டாக்களையும் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## பாக். பிரஜை கண்டியில் கைது

விசா இன்றி நாட்டில் தங்கியிருந்த பாகிஸ்தான் பிரஜையை கண்டியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்தே 32 வயதான அஹமட் அப்துல் என்பவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-5)

## ஜனாதிபதி மைத்திரி இன்று திருமலைக்கு



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று திங்கட்கிழமை திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

100 நாள் வேலைத்திட்டம் சம்பந்தமாக அங்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் அவர் கலந்து கொள்வார்.

கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்க அதிபர் உள்ளிட்ட மாவட்ட செயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ மற்றும் மாகாண சபை உயர் அதிகாரிகள், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸிர் அகமட் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இலங்கையர்களின் கறுப்புப் பணம் குறித்து சுவிட்சர்லாந்து விசாரணைகளை ஆரம்பிப்பு

சுவிட்சர்லாந்தில் உள்ள வங்கிகளில் 92 இலங்கையர்கள் வைப்புச் செய்துள்ள 28 மில்லியன் டொலர்கள் அதாவது 7 பில்லியன் ரூபா பணம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுவிட்சர்லாந்து வழக்குகள் தொடர்பான பணிப்பாளர் ஒலிவர் ஜெனாட் இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

சட்டவிரோத நிதி வர்த்தகம் குறித்து கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

92 இலங்கையர்கள் யார் என்பது பற்றிய தகவல்கள் சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின் வழக்குகள் தொடர்பான பணிப்பாளரின் அலுவலகத்திற்கு கிடைத்துள்ளன.

இந்த இலங்கையர்களில் ஒருவருக்கு சுவிஸ் வங்கியில் ஒரு பில்லியன் ரூபா பணம் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. (இ-5)

## கஞ்சாவுடன் இருவர் கைது

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்களை பத்தேகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இந்தி கஸ்கெட்டிய பிரதேசத்தில் வைத்து குறித்த இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்களை பத்தேகம மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## திட்ட முன்மொழிவுகள்

வடக்கு மாகாண சபையிடம் செயற்றிட்டங்களுக்கு நிதியுதவி கோரும் விண்ணப்பங்கள் பல பேரவைச் செயலகத்திற்கும் அவைத் தலைவருக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளமையால் நிதி உதவிகோருவோர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களுடன் தொடர்பு கொண்டு தமது கோரிக்கைகளை அவர்களூடாக சமர்ப்பிப்பதன் மூலம் அவற்றின்மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்யலாம் என வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# கழிவு ஒயில் கலந்த பகுதியில் குடிநீர் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் சில கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பது பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து முதற்கட்டமாக இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் சுற்றாடலில் வசிக்கும் மக்களுக்கும் குடிநீர் வழங்கப்படவுள்ளது. சண்டிலிப்பாய் பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கமைய கழிவு ஒயில் கலந்திருப்பதாக இனங்காணப்பட்ட இடங்களில் நான்கு தண்ணீர் தாங்கிகள் வைத்து குடிநீர் வழங்குவதற்கான ஒழுங்குகளை வலி. தென்மேற்குப் பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

முதன் முதலாக வலி. தெற்குப் பிரதேசத்திலுள்ள கிணறுகளில் காணப்பட்ட கழிவு ஒயில் படலம் நாளடைவில் வலி. வடக்கிலுள்ள கிணறுகளுக்கும் ஊடுருவி தற்பொழுது வலி. தென்மேற்கு வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களிலுள்ள கிணறுகளிலும் படிந்துள்ளது.

வலி. தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள சுதுமலை வடக்கு, தெற்கு மானிப்பாய், மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள 28 கிணறுகளில் கழிவு ஒயில் கலந்திருப்பதாக சந்தேகப்பட்டதை அடுத்து சுதுமலை வடக்கு மாசியப்பிட்டி ஆகிய இடங்களிலுள்ள இரு கிணற்று நீர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்படி இரு கிணறுகளிலும் உள்ள நீரில் கழிவு ஒயில் கலந்திருப்பதாக பரிசோதனை மூலம் உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து முதற்கட்டமாக இப்பகுதியைச் சூழவுள்ள சுமார் 80 குடும்பங்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. (இ-5)

## தந்தையும் மகளும் ரயிலில் மோதி பலி!

தந்தையொருவரும் அவருடைய 10 வயதுடைய மகளும் புகையிரதத்தில் மோதி பலியான சம்பவம் பேரதெனியவில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசிலுக்காக நடத்தப்படும் தனியார் வகுப்புக்கு தனது மகளை அழைத்துச்சென்ற போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## இராசி பலன்

23.02.2015

(மாசி 11, திங்கட்கிழமை)

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 7.45 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 12.33 மணிவரை

இராகுகாலம் 8.00- 9.30 மணிவரை

சுபநேரம் 12.30- 2.00 மணிவரை

வளவன்

**மேடம்:** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், எதிர்பார்க்காமல் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கக்கூடும், பணியில் சில மன உளைச்சல் ஏற்படலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், ஒரு வேலையை முடிக்க ஒருமுறைக்கு இருமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறைவான நாள்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கடகம்:** தொட்ட காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மனமகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு.

**சிம்மம்:** சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், வருங்காலத்திற்காக திட்டமொன்றை தீட்டுவீர்கள்.

**கன்னி:** எடுத்த காரியத்தை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகலாம், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகளை கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்:** பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் வருகையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மகரம்:** பிறருக்காக எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும், அதிர்ஷ்டகரமான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மீனம்:** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப காரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையைத் தூண்டுவதே விற்பனை மந்திரம்




உங்களது தயாரிப்போ அல்லது நீங்கள் அளிக்கும் சேவையோ வாடிக்கையாளரின் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். பொருள்கள் விற்பனையின் அவசியத்தை பார்த்தோம். இப்போது பொருளுக்கான தேவை மற்றும் விற்பனையாளரின் திறமை எந்த அளவுக்கு அவசியம் என்பதைப் பார்க்கலாம்.

கொழும்பில் வசிக்கும் தம்பதியர் கஜி. பிரியா. இருவருமே தனியார் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள். தங்களது குழந்தையைப் பகலில் குழந்தை காப்பகத்தில் விட்டு விட்டு வேலைக்குச் செல்வதுதான் வழக்கம். இவர்களது பிரிட்ஜ் கடந்த சில வாரங்களாகவே சரியாக வேலை செய்யவில்லை. ஒரு நாள் நள்ளிரவில் குழந்தை பசியில் வீறிட்டு அழுதது. பிரிட்ஜை திறந்தால் அது அணைந்து போய் மணிக்கணக்காகியிருந்தது. உள்ளேயிருந்த பால் கெட்டுப் போயிருந்தது.

நள்ளிரவில் அக்கம்பக்கத்து வீடுகளின் கதவைத் தட்டி பால் கேட்டு குழந்தையின் பசியாற்றிய பின் இருவரின் மனதிலும் உடனடியாக பிரிட்ஜ் வாங்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. மறுநாள் காலையில் இருவரும் அலுவலகத்துக்கு லீவு போட்டு விட்டு பிரிட்ஜ் வாங்கச் சென்றனர்.

இது ஒரு உதாரணம்தான். இப்படித் தான் நம்மில் பல பொருள்களோ அல்லது சேவைகளோ தேவைப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இதனை வாடிக்கையாளர்களிடமிருந்து வெளிக் கொணர்ந்து அது அத்தியாவசியமான தேவைதான் என்பதை வலியுறுத்தி பொருள்களை விற்பனை செய்வது தான் விற்பனையாளரின் முக்கியமான பணியாகும்.

இந்தப் பணி செவ்வனே நடக்காவிட்டால், வாடிக்கையாளர்கள் அவர்களுக்கு தேவையானபோது தாங்களாகவே வாங்குவார்கள் என்று எதிர்பார்த்து காத்திருந்தால் கடையை மூடிவிட்டுச் செல்ல வேண்டியதுதான்.

மேலும் ஒரு உதாரணம் மாணவர்களின் புரிதலை மேம்படுத்த கல்வி மையம் ஒன்றுக்கு ஒரு டிவி தேவைப்பட்டது. அப்போது மின்னணு பொருள் கண்காட்சி விளம்பரம் கண்ணில் பட்டது. எமது ஊழியருடன் கண்காட்சிக்கு சென்றோம். அங்கு முதலில் ஒரு அரங்கைப் பார்வையிட்டோம். அங்கிருந்தவர் ஒரு டிவியை காட்டி அதில் உள்ள வசதிகளைப் பட்டியலிட்டதோடு அதி நவீன வசதிகள் கொண்ட அந்த டிவி-யின் விலை ரூ. 21 ஆயிரம் என்றார். அதை மனதில் வாங்கிக் கொண்டு அடுத்த அரங்கை நோக்கி நகர்ந்தோம்.

இரண்டு மூன்று அரங்குகள் தள்ளி மற்றொரு விற்பனை அரங்கில் நுழைந்தோம்.

அங்கிருந்த விற்பனையாளர் எங்களை அணுகி, வீட்டிற்கு டிவி வாங்கப் போகிறீர்களா? என்றார். இல்லை என்றதும் அலுவலகத்துக்கா? எனக் கேட்டார். இல்லை கல்வி மையத்துக்கு என்றோம். வகுப்பறையில் டிவி எதற்கு அதன் பயன்பாடு என்ன எவ்வளவு மாணவர்கள் உள்ளனர் என கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார். மாணவர்களுக்கு குறும்படம் மூலம் விளக்க டிவி அவசியம் என்றதும் வகுப்பறையில் சவுண்ட் புரூப் வசதி உள்ளதா என்று அடுத்த கேள்வி கேட்டார். இல்லை என்றோம்.

நீங்கள் பாடம் நடத்தும்போது இடையிடையே டி.வியை நிறுத்தி விட்டு பாடத்தைத் தொடர்வீர்களா? அப்படியெனில் உங்களுக்கு ரிமோட் வசதி தேவையாக இருக்குமே என்றார். ஆம் என்றோம். உடனே உங்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக ஒரு டி.வி உள்ளது என்று ஒரு டிவியைக் காட்டினார். அதன் செயல்பாடுகள் எமக்குப் பிடித்ததால் அதன் விலை ரூ. 27 ஆயிரமாக இருந்தாலும் வாங்கி வந்தோம்.

இதை இங்கு சொல்வதற்குக் காரணமே, வாடிக்கையாளரின் தேவை என்ன என்பதை அங்கிருந்த விற்பனை பிரதிநிதி நன்கு உணர்ந்து அதற்கேற்ற தயாரிப்பை நமது தேவைகளோடு பொருத்தி விவரித்ததுதான். இதுபோன்ற விற்பனை பிரதிநிதி உங்களுக்குக் கிடைத்தால் உங்கள் தயாரிப்புகளின் விற்பனை சக்கைபோடு போடும்.

எந்த ஒரு தயாரிப்புக்கும் விற்பனை அவசியம் அல்லவா? விற்பனை இல்லையேல் காணாமல் போய்விடுவோம். அதற்கு முன் ஒரு தொழில் முனைவரான நீங்கள் விற்பனைக் கலையை. அதன் நுணுக்கங்களை கற்றுக் கொண்டு உங்கள் வசமாக்கினால் நிறுவன வளர்ச்சியை யாராலும் தடுக்க முடியாது. அதற்கு முன் நீங்கள் விற்பனை செய்வதை உங்கள் வசப்படுத்திக் கொண்டால் உங்கள் நிறுவன வளர்ச்சியை யார் தடுக்க முடியும்.




## செலவின அதிகரிப்பால் பணவீக்கம் அதிகரித்து பொருளாதார சமமின்மை ஏற்படலாம்!

இலங்கையின் புதிய இடைக்கால வரவு செலவுத் திட்டம் துண்டுவிழும் தொகையை 4.4 சதவீதத்திற்கு குறைப்பதாக யோசனை தெரிவிக்கப்பட்டபோதிலும் தற்போதைய செலவின அதிகரிப்பினால் பணவீக்கம் அதிகரித்து பொருளாதார சமமின்மை ஏற்படக்கூடிய சாத்தியம் இருப்பதாக Moody's Investors Service எச்சரிக்கை செய்துள்ளது.

மொத்த உள்ளூர் உற்பத்தியின் 4.4 சதவீத துண்டுவிழும் தொகையை சீர்செய்ய முடியுமானால் இலங்கை ஏனைய நாடுகளுக்கு நிகராக B1 தரப்படுத்தலுக்கு உள்ளாகும். அத்துடன் உத்தேச வரவு செலவுத் திட்ட வருமானத்தை சேகரிக்க முடியாமல் போனால் துண்டுவிழும் தொகை மேலும் அதிகரிக்கும் அபாயம் உருவாகும் என்றும் Moody's Investors' Service எச்சரித்துள்ளது.




கசினோ சூதாட்ட கழகங்களிலும் ஏனைய நிறுவனங்களிலும் வரியாக விதிக்கப்பட்ட பெருமளவு பணம் உண்மையில் அவற்றினால் செலுத்தப்படுமா என்ற சந்தேகம் ஏற்கெனவே நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வருமானத்தை சம்பாதிப்பதற்கான சில யோசனைகள் எதிர்கால முதலீடுகளிலும் அபிவிருத்தியிலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் ஐயம் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க துறை ஊழியர்களின் சம்பளத்தை 47 சதவீதத்தால் அதிகரிப்பது எதிர்காலத்தில் நுகர்வில் அதிகரிப்பை ஏற்படுத்தி பணவீக்கத்தையும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

## 99X Technology தொழில்புரிய சிறந்த நிறுவனமாகத் தெரிவு

99X Technology செயற்பாடுகள் மற்றும் விநியோக முகாமையாளர் செஹானி செனவிரட்ன ஆசியாவில் பணியாற்ற சிறந்த நிறுவனத்துக்கான விருதை அண்மையில் மும்பையில் இடம்பெற்ற Great Place To Work கலவியகத்தின் விருதுகள் வழங்கலின் போது கல்வியகத்தின் சர்வதேச பிரதம நிறைவேற்று அதிகாரி சீனா கோர் மனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.

தொடர்ச்சியாக தமது ஊழியர்களுக்கு பணியாற்ற சிறந்த நிறுவனமாக 99X Technology தெரிவு செய்யப்பட்ட வண்ணமுள்ளது. இதன் அடிப்படையில் மும்பை நகரில் அண்மையில் இடம்பெற்ற Great Place To Work ஆசியா விருதுகள் வழங்கலின் போதும் இந் நிறுவனத்துக்கு பணியாற்ற சிறந்த நிறுவனம் எனும் விருது வழங்கப்பட்டிருந்தது. ஆசியாவில் பணியாற்ற சிறந்த நிறுவனம் என பெயரிடப்பட்டிருந்ததுடன், இலங்கையிலிருந்து இந்த விருதுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த முதலாவதும் ஒரே நிறுவனம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

ஆசியாவின் சிறந்த சிறிய மற்றும் மத்தியளவு நிறுவன பிரிவிலிருந்து இந்த விருதை தனதாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மொத்தமாக 60 நிறுவனங்கள் இந்த பிரிவிலிருந்து ஆசிய நாடுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிறுவனங்களை பொறுத்தமட்டில் தமது ஊழியர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது பிரதான குறிக்கோளாக அமைந்துள்ளது. அத்துடன், ஊழியர்களை முன்னிலையில் திகழச் செய்வது என்பதற்கு அதிகளவு முக்கியத்துவத்தை வழங்குவதுடன், இதன் மூலம் அதீத நம்பிக்கை, பெருமை மற்றும் நட்புணர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

99X Technology இன் இணை தாபகரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மனோ சேகரம் கருத்து தெரிவிக்கையில்,

"இந்த பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்தமை என்பது மிகப்பெரும் சாதனையாக அமைந்துள்ளது. குறிப்பாக எமது நிறுவனத்துக்கும் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தும் தகவல் தொடர்பாடல் துறையைச் சேர்ந்த நிறுவனம் எனும் வகையில் இது பெரும் புகழாக அமைந்துள்ளது. இந்த உயர் மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தமை தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எமது ஊழியர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் நாம் முன்னெடுக்கும் செயற்பாடுகளின் [illegible] துள்ளது என்றார்.

## கொழும்பு துறைமுகநகர் திட்டம் இடைநிறுத்தத் தீர்மானம்

சீன அரசினால் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்டம் தொடர்பாக சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கும்வரை அத் திட்டத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை கிடைக்கப்பெற்ற பின்னரே திட்டத்தை தொடர்வதா? இல்லையா? என்று அரசாங்கம் தீர்மானிக்கும் என பதில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரயெல்ல தெரிவித்துள்ளார்.

சீனாவுடனான உறவு முக்கியம். ஆனால் சீனாவிடம் இருந்து நாங்கள் கடன்களை எதிர்பார்க்கவில்லை. மாறாக முதலீடுகளை எதிர்பார்க்கிறோம். அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் என்பன கடன்களில் செய்யப்பட்ட திட்டங்களாகும். எமக்கு முதலீடுகளே அவசியமாகும்.

சீனாவினால் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக நகர் அபிவிருத்தி திட்டம் தொடர்பாக சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்படவில்லை என்று கடந்த அமைச்சரவைக் கூட்டமொன்றில் பிரதமர் அறிவித்திருந்தார்.

எனவே அந்த அறிக்கைகளைப் பெற்ற பின்னரே அதனைத் தொடர்வதா? இல்லையா என்று அரசாங்கம் தீர்மானிக்கும். அதுவரைக்கும் அதனைத் தொடர முடியாது. அந்த வகையில் தற்போது நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் முன்னர் இம் மாத ஆரம்பத்தில் அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,335.51 | 7,314.91 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 4,133.19 | 4,133.01 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,358.932 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** ஈஸ்டன் மேர்சன்ட் (11.30), லங்கா அலுமினியம் (75.50), சலிமர்(2375.00), செலின்சிங்(1961.20), லைற்ஹவுஸ் ஹோட்டல்(19.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.20), ஈகுவிட்டி (40.00), கலமசு (1007.60), என்ரஸ் செக். (43.10), ரோக்கியோ சீமெண்ட் (59.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 131.77 | 134.55 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 202.60 | 208.33 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 148.89 | 153.81 |
| சுவிஸ் பிராங் | 138.01 | 142.88 |
| கனேடிய டொலர் | 104.97 | 108.44 |
| அவுஸ்திரேலிய டொலர் | 101.89 | 105.92 |
| சிங்கப்பூர் டொலர் | 96.58 | 99.69 |
| ஜப்பான் யென் | 1.10 | 1.13 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.13 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 36.18 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகிந்த இன்றி தேர்தலில் வெற்றியீட்டவே முடியாது



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ இன்றி தேர்தலில் வெற்றியீட்ட முடியாது என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் பிளவுகளை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை.

57 இலட்சம் மக்கள் மகிந்த ராஜ பக்ஷவிற்கு வாக்களித்துள்ளனர். அன்னப் பட்சிக்கு வாக்களித்த பலர் அதிருப்தி அடைந்துள்ளனர். மீண்டும் மகிந்தவிற்கு வாக்களிப்பதற்காக காத்திருக்கின்றார்கள்.

மகிந்த ராபஜக்ஷ பிரதமர் வேட்பாளராக போட்டியிடுவார். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் நானும் தேர்தலில் போட்டியிடுவேன். அமைச்சுப் பதவிகள் இன்றி இருப்பதில் எவ்வித சிக்கல்களும் கிடையாது.

அமைச்சுப் பதவி எங்களுடன் ஒட்டிக் கொண்ட விடயமல்ல. எனவே பதவி இன்றி இருப்பதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது என விமல் வீரவன்ச மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேருக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுக்கள்

(கொழும்பு)

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 17 பேருக்கு எதிராக கடுமையான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கையூட்டல் பெற்றுக் கொள்ளல், தரகுப் பணம் பெற்றுக் கொள்ளல், சட்ட விரோதமான முறையில் சொத்துக்களை குவித்தல், நிதி மோசடிகள் உள்ளிட்ட பாரியளவிலான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சிரேஷ்ட அமைச்சர்கள், அமைச்சர்கள், சில பிரதி அமைச்சர்கள், சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட தரப்பில் உள்ளடங்குகின்றனர்.

இந்த மக்கள் பிரதிநிதிகள் பாரியளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டமை குறித்த விபரங்கள் சாட்சியங்களுடன் கிடைத்துள்ளதாக ஊழல் மோசடிகளுக்கு எதிரான முன்னணி தெரிவித்துள்ளது.

அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரையில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட சம்பவங்கள் தொடர்பில் ஆயிரத்து 900 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த முறைப்பாடுகளில் ஒரு பகுதி முறைப்பாடுகள் ஏற்கனவே கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)


## மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்



**செல்லமுத்து ஸ்ரீநிவாஸன்**

SLAS (Special Grade), MA (Public Admin), MA (Dev.Studies), PGD (Marketing), PGD ( Management), DPM, B.A

(மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்)

எமது மேலதிக அரசாங்க அதிபர் திரு.செல்லமுத்து ஸ்ரீநிவாசன் அவர்கள் இன்று 23.02.2015 திங்கட்கிழமை தனது 60 ஆவது அகவையைப் பூர்த்தி செய்வதோடு அரச சேவையில் இருந்தும் ஓய்வுபெறுகின்றார். இவர் 1974 ஆவணி மாதம் இலங்கை புகையிரதத் திணைக்களத்தில் லிகிதராக தனது அரச சேவையை ஆரம்பித்து 1990 வைகாசி மாதம் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தராக பதவியுயர்வு பெற்று வடக்கு கிழக்கு மாகாண சபையில் கடமையாற்றினார். பின்னர் பல்வேறு பிரதேச செயலகங்களில் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி 2010 ஐப்பசி மாதம் எமது மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபராக நியமனம் பெற்றார். இவரின் அறிவாற்றல் சேவை அனுபவம் என்பவற்றின் பேறாக 2011 தை மாதம் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு தரமுயர்வு பெற்றார்.

இவரது சேவையைப் பாராட்டுவதோடு எமது மாவட்ட செயலகம் சார்பில் 60 ஆவது பிறந்த தின நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நீடூழி காலம் வாழ இறைவனின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றோம்.

அரசாங்க அதிபரும் சக உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், மாவட்ட செயலகம், கிளிநொச்சி.

(9574)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 291

சத்தியா பிரகாஸ்




கார்த்திக் குமார்




கலக்சினி ரவீந்திரன்




லவன் லவலோயன்




ரஞ்சி ரஞ்சினி




யது யதுசன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசடியில் ஈடுபட்ட நபரின் பெயரை குற்றப்புலனாய்வு பிரிவு கண்டுபிடிப்பு

(கரணவாய்)

சுவிஸ் நாட்டிலிருந்து வந்த 56 வயதுடைய நபர் கரவெட்டி கிழக்கிலுள்ள பெண்ணொருவரைத் திருமணம் செய்ய முற்பட்ட வேளை கைது செய்யப்பட்டவர் பாலசிங்கம் சத்தியானந்தன் எனத் தெரியவந்துள்ளது.

கடந்த 24 வருடங்களாக சுவிஸில் வசித்து வந்த இவர் தவறான தெலைபேசி அழைப்பை ஏற்படுத்தி பிரஸ்தாப பெண்ணுடன் தொடர்பை ஏற்படுத்தியுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன் திருமணத்திற்கு முன்னதாக திருகோணமலைக்கும் இந்தியாவுக்கும் செல்ல வேண்டியிருப்பதாகக் கூறியபொழுது அவரில் சந்தேகம் கொண்ட பெண்ணின் உறவினர்கள் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை என்பவற்றைக் கேட்ட பொழுது அவை அவரிடம்இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டார்.

மேலும் அவருடைய வங்கிக் கணக்கு தொடர்பான விபரங்களையும் பொலிஸார் பிரஸ்தாபப் பெண்ணிடமிருந்து பெற்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-60)




# பகிடிவதை அதிகரிப்பு

## பெற்றோர் கவலை

**(யாழ்ப்பாணம்)**

**தனியார் கல்வி நிலையங்களுக்குச் சென்று வரும் மாணவிகள் மீதான பகிடிவதைகள், சேட்டைகள் புரியும் இளைஞர்களின் அட்டகாசம் நெல்லியடிப் பகுதியில் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி பெற்றோர் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.**

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மகாத்மாகாந்திவீதி நெல்லியடிச் சந்தி, புளியடிச் சந்தி, உடுப்பிட்டி சந்தி, நாவலப்பிட்டி சந்தி, விக்னேஸ்வரா புளியடிச் சந்தி மற்றும் தொலைத்தொடர்பு சாதன விற்பனை நிலையங்கள் என்பவற்றின் முன்பாக இளைஞர்கள் கூட்டமாக நின்று பகிடிவதை புரிவதாகவும் இதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை கல்வி நிலையங்களுக்கு அனுப்பி விட்டு அவர்கள் வீடு வந்து சேரும் வரை ஏக்கத்துடன் பொழுதைக் கழிப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனவே இது விடயத்தில் அக்கறை எடுத்து இளைஞர்களின் பகிடிவதைகளை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இல்லாவிடில் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனவும் பெற்றோர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர். (இ-3-60)

# அரச உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட மோ.சைக்கிள்களுக்கு முழுமையான காப்புறுதி

(யாழ்ப்பாணம்)

களப்பணியில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு முழுமையான காப்புறுதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிய சுற்றறிக்கையே அனுப்பப்பட்டுள்ளதாக தேசியக் காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் யாழ்.இணைப்பு அதிகாரி சி.மதனகுமார் தெரிவித்தார்.




ஒரு வருடத்திற்கு முழுக்காப்புறுதிக் கட்டணமாக 5 ஆயிரம் ரூபா அறிவிடப்படுகிறது.

மூன்றாம் நபர் காப்புறுதி செய்வது தொடர்பாக சுற்றறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

இதேவேளை வாகனங்களுக்கான முழுக்காப்புறுதிக்கான நடவடிக்கைகளே ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெற்று வருவதாகவும் மூன்றாம் நபர் காப்புறுதி செய்வதற்கு இடமளிக்கப்படவில்லை எனவும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பிராந்திய முகாமையாளர் சுமுது தெரிவித்தார்.

அத்துடன் சில பிரதேசங்களில் இரண்டு மாதத்துக்கு ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் செலுத்துவதற்கு தேவைப்பாடுகளினடிப்படையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# 14 வயதுச் சிறுமியை திருமணம் செய்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். இளவாலை பனிப்புலம் பகுதியை சேர்ந்த 14 வயதுச் சிறுமியை திருமணம் செய்த அதே யிடத்தைச் சேர்ந்த 25 வயதுடைய சந்தேகநபரை நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய் ததாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 14 நாட்களுக்கு முன்னர் இந்த சிறுமியை கூட்டிச் சென்ற சந்தேக நபர், சிறுமியை திருட்டுத்தனமாக திருமணம் செய்து குஞ்சம் கலட்டி பகுதியிலுள்ள வீடொன்றில் சிறுமியுடன் வாழ்ந்து வந்துள்ளார். இது தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்று அவ்விடத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். மேற்படி சந்தேக நபர் ஏற்கனவே திருமணமானவர் என ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரியவருகின்றது. (இ-5)

# கணிதப்போட்டி

தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு அவர்களின் பாடத்திட்டத்திற்குட்பட்ட முறையில் அவர்களது திறமைக்கு களம் அமைக்கும் வகையிலும் கணித பாடத்தில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையிலும் மாபெரும்கணிதபோட்டி ஒன்றை நடத்த இளவாலை இளைஞர் கழகங்கள் ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளன. இப் போட்டியில் வெற்றி பெறும் வெற்றியாளருக்கு கணியாளன் என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்படவுள்ளதுடன் மிகப் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இப்போட்டியில் நடுவர்களாக யாழின் பிரபல கணித ஆசிரியர்களும் கணித வல்லுநர்களும் அழைக்கப்படவுள்ளனர். இப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளதுடன் இப்போட்டிக்கான விண்ணப்பங்களை இளவாலை ஹென்றிசியன் அறிவகத்தில் பெற்றுக் கொள்ள முடியும். விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை 0750416476 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3-28)

# மின்னல் குறூப்பைச் சேர்ந்த இருவருக்கும் மன்று பிணை

(கரணவாய்)

இளைஞர் ஒருவரைத் தாக்கி ஆட்டோவில் கொண்டு வந்து மந்திகை வைத்தியசாலை வாயிலருகே வீசி வீட்டுச் சென்ற மின்னல் குறூப்பைச் சேர்ந்த இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது இருவரையும் ஒவ்வொரு நாளும் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று கையொப்பமிடுமாறும் எதிர்வரும் மார்ச் மாதம் 20 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் பருத்தித்துறைப் பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். இதேவேளை சந்தேக நபர்கள் இருவரும் தலா 50 ஆயிரம்ரூபா ஆட்பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3-60)

# களனி பல்கலைக்கழகத்தின் இலக்கிய பயணவிழா இன்று

களனிபல்கலைக்கழகத்தின்கலைப் பீடத்தினது இருபத்தொராம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியான **இலக்கிய பயணக்குழுவினர்** யாழ். பல்கலைக்கழத்திற்கு வருகை தந்து கருத்தாடல் சமூகங்கள் சிங்கள இலக்கியத்தில் எங்ஙனம் கருப்பொருளாக அமைகின்றன என்பது பற்றிய இலக்கிய வாசிப்பையும் கலந்துரையாடலையும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடத்தவுள்ளனர். இலக்கிய ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி வேண்டப்படுகிறீர்கள். (இ)

# கஞ்சா பொதியுடன் கைதான நால்வருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் முச்சக்கரவண்டி மற்றும் 8 கிலோ கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களையும் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சின்னத்துரை சதீஸ்கரன உத்தரவிட்டுள்ளார்.

மாதகல் துறைமுகப் பகுதியினூடாக இளவாலைக்கு கொண்டு வரப்பட்ட கஞ்சாவை, யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு சென்றுகொண்டிருக்கும் போது, சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சந்தேகநபர்கள், கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள், கஞ்சாவை முச்சக்கரவண்டியின் இயந்திரப் பகுதிக்குள் மறைத்து வைத்துக் கொண்டு சென்றிருந்தனர்.

மானிப்பாய், ஐந்துசந்தி, சுன்னாகம் மற்றும் பருத்தித்துறை ஆகிய பகுதிகளை சேர்ந்த சந்தேகநபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வளலாயில் 25க்கு அதிகமான கிணறுகளில் வெடிகுண்டுகள்

(யாழ்ப்பாணம்)

வளலாய் பகுதியில் 25க்கு மேற்பட்ட கிணறுகள் வெடிகுண்டுகள் அகற்றப்படாமல் வெடிகுண்டு அபாயம் உள்ளது என்ற அபாய அறிவிப்பு எச்சரிக்கை அறிவித்தல்கள் இடப்பட்ட நிலையில் உள்ளன. இதனால் இக் கிணறுகளைப் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாகவும் வெடிகுண்டுகள் அகற்றும் குழு வெளியேறி விட்டதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

வளலாய் பகுதியில் பாதுகாப்பு அரணுக்கு வெளியே கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னரே மக்கள் பயன்பாட்டிற்கு குடியிருப்புக்கு விடப்பட்ட பகுதியில் உள்ள கிணறுகளில் 25க்கு மேற்பட்ட கிணறுகள் வெடிகுண்டுகள் அகற்றப்படாமல் உள்ளன. இதில் சில கிணறுகள் நீர் இல்லாமல் தூர்க்கப்பட்ட நிலையிலும் சில கிணறுகள் நீர் உள்ள நிலையிலும் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பிரதமராக வேண்டுமென நான் ஒருபோதும் கூறவில்லை

## கெஹலிய விளக்கம்

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுவது தற்போதைய அரசியல் சூழலில் கட்சியை பாரியளவில் பலப்படுத்தும் என முன்னாள் ஊடக பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தான் பிரதமர் வேட்பாளரை பற்றி கருத்து கூறவில்லை.முன்னாள் ஜனாதிபதி சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுவது கட்சிக்கு பாரிய பலமாகும்,

அதுமாத்திரமல்லாது பிரதமர் வேட்பா ளர் குறித்து கட்சி செயற்குழுவே தீர்மானிக்க வேண்டும் எனவும், தேர்தல் தினம் அறிவித்தவுடன் பிரதமர் வேட்பாளர் யாரென்று கட்சி அறிவிக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரதமர் வேட்பாளர் குறித்து என்னால் கருத்துக்களை வெளியிடமுடியாது, அவ்வாறு வெளியிட்டாலும் என் கருத்துக்கள் எடுபடவும் மாட்டாது என அவர் தெரிவித்ததோடு, பிரதமர் வேட்பாளராக மகிந்தவை கட்சி அறிவித்தால் அதற்கு நான் கட்சி உறுப்பினர் என்ற அடிப்படையில் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டேன் எனவும் சுட்டிக்காட்டினார். (இ-5)

# சவுதியில் மரண தண்டனை விதித்த இலங்கையருக்கு மன்னிப்பு வழங்கவும்

## ஜனாதிபதி கோரிக்கை

சவுதியில் கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மூவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையிலிருந்து மன்னிப்பு வழங்குமாறு கோரி சவுதி அரசருக்கு ஜனாதிபதி கடிதமொன்றை அனுப்பவுள்ளார்.

ஏமன் நாட்டு பிரஜையொருவரை தாக்கி அவர் மரணத்துக்கு காரணமாக விருந்ததோடு கொள்ளையிலும் ஈடுபட்ட மூன்று இலங்கையர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த மரண தண்டனையை சவுதி அரேபிய நீதிமன்றம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

இந்நிலையில் சவுதி அரேபியாவுக்குச் செல்லவுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் குறித்த கடிதத்தை சவுதி அரசரை நேரடியாக சந்தித்து வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மகிந்தவின் பாதுகாப்புப் பிரிவிற்கு இடமாற்றக்கோரியுள்ளார் யோசித

## ருவான் விஜயவர்த்தன தகவல்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு பிரிவில் தன்னை நியமிக்குமாறு யோசித ராஜபக்ஷ வேண்டுகோள் ஒன்றினை முன்வைத்துள்ளதாக அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் இந்த வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

யோசித ராஜபக்ஷ தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணியினால் முன்வைத்த முறைப்பாடு தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அமைச்சர் ருவான் விஜேவர்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணி முன்வைத்த முறைப்பாடு தொடர்பாக ஏற்கனவே கடற்படை தளபதியுடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் யோசித ராஜபக்ஷ எவ்வாறு கடற்படையில் இணைந்து கொண்டார் என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ருவான் விஜேவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776
(சி-9913)


# ஹெல உறுமயவினால் அரசிற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

ஊழல் மோசடிகள் தொடர்பில் உரிய முறையில் விசாரணை நடத்தப்படாவிட்டால் சகல அதிகாரங்களையும் கைவிட்டு வெளியேறிச் செல்ல புதிய அரசாங்கம் ஆயத்தமாக வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற பாரியளவிலான ஊழல் மோசடிகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகள் அங்கம் வகிக்கும் ஊழலுக்கு எதிரான முன்னணி முறைப்பாடு செய்திருந்ததோடு பல மில்லியன் ரூபா பெறுமதியான பாரிய நிதி மோசடிச் சம்பவங்கள் ஏழு தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீலங்கா டெலிகொம், இலங்கை தொலைத்தொடர்பு கட்டுப்பாட்டு ஆணையகம், துறைமுக அதிகார சபை, வளிமண்டலவியல் திணைக்களம், எப்பாவெல பொஸ்பேட் நிறுவனம், பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனம், வானத்தவில்லு பிரதேச சபையில் இடம்பெற்ற மோசடிகள் உள்ளிட்ட சம்பவங்கள் குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை புதிய அரசாங்கம் காலம் தாழ்த்தினால் அதிகாரங்களை கைவிட்டு வீட்டுக்கு செல்ல நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் ஊழல் மற்றும் மோசடி தொடர்பான விசாரணைகளை தாமதப்படுத்தினால் அரசாங்கத்திற்கு ஏழரைச் சனி ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார். (இ-5)

# வெளிநாட்டு பணத்தைக் கடத்த முயன்ற வர்த்தகர் கட்டுநாயக்காவில் கைதானார்

(கொழும்பு)

ஒருதொகை வெளிநாட்டு பணத்தை கடத்த முற்பட்டதாக கூறப்படும் வர்த்தகரொருவரை இலங்கை சுங்க திணைக்கள அதிகாரிகள், கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

மேலும் இவரிடம் இருந்த 8.3 மில்லியன் பெறுமதியான வெளிநாட்டு பணத்தையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். 20,800 யூரோ, 17,300 பிரிட்டன் பவுண் மற்றும் 24,000 சவுதி றியால் போன்ற வெளிநாட்டு பணங்களை அவருடைய பையில் மறைத்து வைத்திருந்துள்ளார்.

தற்போது குறித்த நபர் ஒரு மில்லியன் ரூபாய் ரொக்கப்பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)


**கல்யாண மாலை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1977 RC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA/ அரச தொழில்
தொ.இ: B/4148

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 59 செவ் 7 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L கொலன்ட் NOT PR
தொ.இ: B/4149

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 31 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: O/L சுவிஸ் PR
தொ.இ: B/4151

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 50 1/4 செவ் 4 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4152

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 40 சூரி,செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L/ தனியார்
தொ.இ: G/4166

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 6
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4168

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 86 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: ஆசிரியர்
தொ.இ: G/4176

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 60 செவ் 7 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்: O/L
தொ.இ: G/4178

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகத்தில் ஒற்றுமையை உருவாக்குவதாக வெற்றி தோல்விகள் பார்க்கப்பட வேண்டும்

## முன்னாள் எம்.பி.ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஒற்றுமை என்பது விளையாட்டுக்களின் மையக்கருவாக உருவாக்கப்பட வேண்டும். இதன் வடிவாக பார்க்கப்பட வேண்டியதே போட்டிகளின் வெற்றியும் தோல்வியும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப் பாளருமான கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம் நடத்திய 9 வீரர்கள் 7 பந்துப் பரிமாற்றங்களைக்கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

கிடைக்கப்பெறுகின்ற வெற்றி தோல்விகளிலிருந்து கற்றுக்கொள்வதை எதிர் கால வாழ்க்கையின் அத்திபாரங்களாக அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதே அனைத்து இளைஞர்களதும் உழைப்பாக இருக்க வேண்டும். இத்தகைய சிறந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டும் என்பது தான் எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.

சமூக ஒற்றுமையை நாங்கள் உருவாக்குவோமானால் எமது இனத்தினது உரிமைகளையும் தேவைகளையும் இலகுவாக வென்றெடுத்துக்கொள்ள முடியும் என்றார்.

அழைக்கப்பட்ட 30 கழகங்களை கொண்டதாக நடைபெற்றுவந்த போட்டியில் சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணியும் உடுவில் ஸ்ரார் போய்ஸ் அணியும் இறுதிப்போட்டியில் மோதிக்கொண்டதில் விக்ரோறியன்ஸ் அணி கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

இந்த நிகழ்வில் கிராம உத்தியோகத்தர்களான சிவரூபன், சிவகுமார் ஆகியோரும் கலந்துகொண்டு கிண்ணங்களை வெற்றியாளர்களுக்கு வழங்கிவைத்தனர். இதில் விளையாட்டுக்கழக முக்கியஸ்தர்கள் ஆர்வலர்கள் என பலரும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம் - 33




யானை மீதேறி குதூகலிக்கும் சின்னஞ்சிட்டுக்கள்!

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி:ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
J. பெனியேல்,
பழைய பூங்கா.

# தமிழக முதலமைச்சர்கள் இலங்கை வராதது ஏன்?

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழக அரசியலில் கருணாநிதியும் ஜெயலலிதாவுமே ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அயல் நாடான இலங்கையுடன் மீனவர் பிரச் சினை, அகதிகளைத் திருப்பி அனுப்பும்விவகாரம்போன்ற விவகாரங்கள் இருந்தாலும் தமிழக முதலமைச்சர்களோ, மாநில அமைச்சர்களோ அரசு முறைப் பயணம் எதையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.

இலங்கையில் போர் முடிவடைந்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் இலங்கைக்கு வர அழைப்பு விடுத்ததாகத் தெரிவிக்கிறார் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன்.

ஆனால், அப்போது 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு மட்டுமே இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டது. அந்தக் குழுவில் தி.மு.க. சார்பில் நான்கு பேரும் காங்கிரஸ் சார்பில் நான்கு பேரும் விடுதலைச் சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் தலா ஒருவரும் இடம்பெற்றனர்.

இம்மாதிரி வெளிநாடுகளுக்கு நேரடியாகச் செல்வது பிரச்சினைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு தீர்க்க உதவுகிறது என்கிறார் அந்தக் குழுவில் இடம்பெற்றிருந்த சுதர்சன நாச்சியப்பன்.மம்தாவைப் போல தமிழக முதலமைச் சர்களும் மத்திய அரசின் அனுமதியைப் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும். குறைந்தது, நதிநீர் பிரச்சினை இருக்கும் அயல் மாநிலங்களுக்காவது சென்று பேச வேண்டும் என்கிறார் தி.மு.க. வைச் சேர்ந்த ராதாகிருஷ்ணன். 'தமிழகத்தில் எல்லாவற்றையுமே உணர்ச்சி வசப்பட்டு அணுகும் போக்கு இருக்கிறது. வெளிநாட்டினருடன் பேசுவதற்கு இந்தப் போக்கு உதவாது' என்கிறார் மூத்த பத்திரிகையாளரான முராரி.

அரசியல் பிரச்சினைகளுக்காக வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வது ஒருபுறமிருக்க, இந்தியாவின் பல மாநில முதலமைச்சர்கள் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டு, தங்களுடைய மாநிலங்க ளுக்கு முதலீடுகளைத் திரட்டுவது வாடிக்கை யாக இருந்து வருகிறது. இருந்தாலும், தமிழக முதலமைச்சர்கள் அம்மாதிரிப் பயணங் களை மேற்கொள்வது என்பது அரிதாகவே இருக்கிறது எனவும் தமிழக முதலமைச்சர்கள் ஏன் இலங்கைக்கு வருவதில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வர்த்தகருக்கு விளக்கமறியல்

பிரபல வர்த்தகரான ரவி வெத்தசிங்ஹவை பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த ரவி வெத்தசிங்ஹவை, குடிவரவு அதிகாரிகள், கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்திருந்தனர். அவர், நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு முயன்றபோதே அதிகாரிகள் அவரை கைது செய்தனர்.

வெத்தசிங்ஹ மீதான பல வழக்குகள் நிலுவையில் இருந்தமையினால், பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராக பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)







பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அதிபர் செல்வி. கிறேஸ் தேவயாளினி தேவராஜா தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேந்திரனும் அவரது பாரியாரும் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் திருமதி இராஜேந்திரன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினிபஸ் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

(பளை)

பளை ஏ-9 வீதியில் துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் மீது பின்புறமாக வந்த மினிபஸ் மோதித் தள்ளியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் பளை மத்திய கல்லூரிக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

இதில் அரசகேணி பளையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை யோகராஜா (வயது -57) என்ற பளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த மினிபஸ் ஒன்று அதே வழியாக துவிச்சக்கரவண்டியில் பயணித்துக் கொண்டிருந்த நபரை மோதியது.

இதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த பிரஸ்தாப நபர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில் அங்கு விரைந்த பொலிஸார் மினிபஸ் சாரதியை கைது செய்தததுடன் மேலதிக விசாரணைகளை நடத்தினர். (அ-2)

# சத்துணவுகளை நாமே உற்பத்தி செய்வோம்

## கிளி.பிரதிவிவசாய பணிப்பாளர்

எமது போசாக்கு தேவையை நிறைவு செய்யக்கூடிய சத்துணவுகளை நாங்களே உற்பத்தி செய்து உணவு தேவைகளுக்கு பயன்படுத்தவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார். கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசனத் திடடத்தில் இபாட் திட்டத்தினால் முன்னெடுக்கப் பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒன்றாக காணப்படும் உப உணவுச் செய்கை யின் சோளச் செய்கை அறுவடை விழா,நேற்று முன்தினம் இராமபுரத்தில் நடைபெற்றது,

அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தை பொறுத்த வரையில் நெற்செய்கையை மேற்கொண்டு நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்ட பின் மறுவயல் பயிர்ச்செய்கை மேற்கொண்டு விவசாயிகள் நன்மையடைய முடியும்.

பரீட்சார்த்தமாக கடந்த ஆண்டிலேயே இவ்வாறான செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வெற்றியளித்தது. கிளிநொச்சி மாவட்டம் கடந்த காலங்களில் போசாக்கு குறைவாகக் காணப்படுவதாக புள்ளி விபரங்கள் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறு நெல் வயல் களில் மறுவயல் பயிர்களை மேற்கொண்டு எமக்கு போசாக்கான உணவுகளை உற்பத்தி செய்து அவற்றை உணவாக சேர்த்து போசாக்குள்ள சமுதாயமாக உருவாக முடியும் என்றார். (அ-2)




# வாகன விபத்தில் பொலிஸார் காயம்



(திருவையாறு)

கிளிநொச்சி ஏ-9 வீதியில் இரு வாகனங்கள் ஒன்றையொன்று முந்திச்செல்ல முற்பட்ட வேளை முன்னால் சென்ற வாகனத்துடன் பின்னால் பயணித்த வாகனம் மோதியதில் இரு பொலிஸார் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சியில் அமைந்துள்ள அந்தோனியார் ஆலயம் முன்பாக நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குறித்த இரு பொலிஸ் வாகனங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்தன.

திடீரென முன்னால் சென்ற வாகனத்தை பின்னால் பயணித்த வாகனம் விலகிச் செல்ல முற்பட்ட வேளை இவ்விபத்து நேர்ந்துள் ளது. (அ-2-273)

# முதலுதவி பயிற்சி முகாம்

(மல்லாவி)

அக்ரொட் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் பின் தங்கிய கிராமங்களான உயிலங்குளம், கோட்டை கட்டிய குளம், தென்னியன் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு தொடர் பான முதலுதவிபயிற்சிமுகாம்நடைபெற்று வருகின்றது.

இப்பயிற்சி முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை செவ் வாய்க்கிழமை வரை காலை 9.30 மணி தொடக்கம் பிற் பகல் 4.30 மணி வரை மு/உயிலங்குளம் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் உயிலங் குளம் கிராம அபிவிருத்தி முன்னேற்ற சங்கத் தின் தலை வர் அ.சிறீகாந்தன் தலைமையில் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி முகாமின் வளவாளர்களாக மல்லாவிஆதார வைத் தியசாலை வைத்தியர் எஸ்.சுஜீந்திரன், மல்லாவி பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அராபத் உட் பட ஜீவகாருண்யம் அரவிந்தன் ஆகியோர் இணைந்து முதலு தவி பயிற்சிகளையும் கருத்துரை களையும் வழங்கவுள்ளனர். (அ-2-15)

# கமக்கார அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு

(பனிக்கன்குளம்)

பனிக்கன்குளம் கிராமசேவையாளர் பிரிவிற்குட்பட்ட கமக்கார அமைப்பின் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 20 ஆம் திகதி பனிக்கன்குளம் பொது நோக்கு மண்டபத்தில் அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக சி.தங்கவேலாயுதம், செயலாளராக கோ. செல்வராசா, பொருளாளராக த.ஜெனிற்றா, உப தலைவராக சி.மனோகரன், உப செயலாளராக மோ.நிறோஜன் ஆகியோர் தெரிவாகினர். உறுப்பினர்களாக ஆ. ஜெயமோகன், க.கிருபாலினி, பொ.கற்பகமலர், சி.கதிரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பனிக்கன்குளம் கிராம சேவையாளர் வே.ஜெயசீலன், பனிக்கன்குளம் கிராம வாழ்வின் எழுச்சி உத்தியோகத்தர் கு.தர்சன், பனிக்கன்குளம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் யோ.புஸ்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (அ-2-281)

# அறிவுறுத்தல் வகுப்பு

(கிளிநொச்சி)


முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு, கரை துறைப்பற்று ஆகிய பிரதேச சபை களுக்கான உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்களில் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களாக செயற்படவுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் வகுப்பு நடைபெறவுள்ளது.

இத்தேர்தலின் போது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 15 சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தேர்தல் கடமையில் பங்கேற்கவுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி செயலமர்வு நாளை மறுதினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 15 அலுவலர்களும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு செல்லவுள்ளனர். (அ-2-254)

# பொதுக்கூட்டம்

கிளி/ முருகானந்தா கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் புதிய நிர்வாக தெரிவும் பாடசாலை அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன. எனவே சகல பெற்றோர்க ளையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (அ-2)





முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/கைவேலி கணேச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்: பனிக்கன் குளம் செய்தியாளர்)

# நூல்வெளியீடு இன்று

வவுனியா தமிழ்ச் சங்கம் வெளியிடும் வன்னியூர் செந்தூரனின் **கற்சிலைமடு நாகம்மாள் ஆலய சரித்திரம்** எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கற்சிலைமடு அருள்மிகு நாகம்மாள் ஆலய மணி மண்டபத்தில் நடைபெறும்.

வவுனியா தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம் பெறும். இவ்வெளியீட்டு நிகழ்வில் ஆசியுரையை ஆலய அர்ச்சகர் சிவத்திரு.கந்தையா சிவராசா வழங்க வாழ்த்துரையை வைத்தியர் நா.வன்னியசிங்கம் நிகழ்த்துவார். தலைமையுரையைத் தொடர்ந்து வெளியீட்டுரையை முல்லைத்தீவு மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சமாசத்தின் பொது முகாமையாளர் சி.வேதவனம் ஆற்றுவார். விமர்சன உரையை கற்சிலை மடு மகா வித்தியாலய அதிபர் சி.நாகேந்திரராஜா நிகழ்த்துவார். (அ-2)

# போத்தல் குத்துக்கு இலக்கான நபர் வைத்தியசாலையில்

மதுபானசாலையில் இருவர் இடையே ஏற்பட்ட தகராறில் போத்தலால் குத்தப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் கிளிநொச்சி உதயநகரில் அமைந்துள்ள மதுபானசாலையில் நடைபெற்றுள்ளது.

இதில் ஜெகநாதன் சுஜீந்திரன் (வயது-30) என்ற குடும்பஸ்தரே தலையில் படுகாயம் அடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த மதுபானசாலையில் இருவரி டையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி போத்தலை உடைத்து குத்தியதாலேயே பிரஸ்தாப நபர் தலையில் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கிசிச்சை பெற்று வருகின்றார். (அ-2-259)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# புரிந்து கொள்ளாத மக்கள்

அன்னாவரம் என்ற கிராமம் மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் நறைந்த கிராமம். அங்கிருந்த விவசாயிகள் பல நூதனமான பயிர்களை விவசாயம் செய்து வந்தனர். பலவிதமான கிழங்கு




களையும், பழமரங்களையும் மூலிகைகளையும் பயிர்செய்து, அவற்றையே தங்கள் முக்கிய உணவாகவும் கொண்டு இருந்தனர்.

அந்த கிராமத்தில் குணவர்மன் என்ற இளைஞன் வசித்து வந்தான். சிறுவயது முதலே, அவன் தீவிர சிந்தனையாளனாக இருந்தான். எப்போதும், எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டேயிருந்தவனை, கிராமத்தினர் சோம்பேறி என்று இளக்காரம் செய்தனர். அவனுடைய வாழ்க்கையின் கண்ணோட்டமே வேறுவிதமாக இருந்தது. கிராமத்து மனிதர்களுடைய வாழ்க்கைமுறை அவனுக்குப் பிடிக்கவில்லை.

"கடவுள் கொடுத்த பகுத்தறிவை நன்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் உல்கில் எத்தனையோ இருக்கின்றன" என்பது போன்ற அவனுடைய புதுமையான சிந்தனைகள் கிராமத்தினரின் மூளையில் நுழையவில்லை.

தன்னுடைய புதிய கருத்துகளை யாரும் ஏற்காததால் சலிப்படைந்த குணவர்மன் ஒருநாள் தன் தந்தையிடம், "அப்பா! இங்குள்ள மக்கள் இயந்திரம்போல் இயங்குகின்றனர். இங்கிருந்தால் என் வாழ்க்கை வீணாகிவிடும்! தண்டகாரண்யக் காட்டில் புஜங்கர் என்பவர் நடத்தும் குருகுலத்தில் சேர்ந்து, என் கல்வி அறிவை அபிவிருத்தி செய்து கொள்ள விரும்புகிறேன். பிறகு அங்கிருந்து திரும்பி வந்து, எந்த கிராமத்தினர் என்னை ஏளனம் செய்கின்றனரோ, அவர்கள் எனக்கு மரியாதை செலுத்துமாறு செய்வேன்!" என்று கூறி விட்டு, தண்டகாரண்யத்தை நோக்கிச் சென்றான்.



புஜங்கரின் ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டுஇருக்கையில், ஒரு தேர் அவன் பின்னால் வந்தது. அவனிடம் வந்து தேரை நிறுத்திய தேரோட்டி, "தம்பி! நீ எங்கு செல்கிறாய்?" என்று கேட்க, குணவர்மன் பதில் சொல்லவும், அவன், "நானும் அங்குதான் செல்கிறேன்! நீயும் தேரில் ஏறிக்கொள்! மன்னரின் தாய்க்கு உடல் நலை சரியில்லாததால், புஜங்கரை அழைத்துச் செல்ல நான் வந்திருக்கிறேன்!" என்று கூறிவிட்டு குணவர்மனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். குருகுலத்தை அடைந்ததும், குணவர்மன் புஜங்கரை கால்களில் விழுந்து வணங்கித் தன் விருப்பத்தை வெளியிட்டான். அதற்கு அவர், "மகனே! என்னிடம் சீடனாகச் சேர வேண்டுமெனில், அதற்குமுன் ஜம்புகாரண்யத்தில் என் பழைய மாணவர் வினயர் ஒரு குருகுலம் நடத்தி வருகிறார். அங்கு சென்று இரண்டு ஆண்டுகள் பயின்ற பிறகு நீ இங்கு வா!" என்றார். "குருவே! உங்களுக்கு என் அறிவுத் திறமையில் சந்தேகம் என்று நினைக்கிறேன். வேண்டுமானால், நீங்கள் என் அறிவை சோதித்துப் பாருங்கள்!" என்றான். "மகனே! இப்போது நான் அரண்மனைக்குச் செல்ல வேண்டிஇருக்கிறது. திரும்பி வர எனக்கு ஒரு வாரம் ஆகும்! அதுவரை இந்த இரண்டு கிரந்தங்களை உன்னிடம் தருகிறேன். இவற்றை கவனமாகப் படி! இவற்றினுடைய கருத்தை நீ நன்றாகப் புரிந்து கொண்டால் மட்டுமே, நீ என் சீடனாக அமையத் தகுதியுள்ளவன்!" என்று கூறிவிட்டு அரண்மனை தேரில் ஏறிச் சென்றுவிட்டார்.

உடனே, மற்ற சீடர்கள் அவனிடம், "இரண்டு ஆண்டுகளாக இவற்றைப் புரிந்து கொள்ள நாங்கள் படாதபாடு படுகிறோம். அப்படி இருக்க, உன்னால் ஒரு வாரத்தில் புரிந்து கொள்ள முடியுமா?" என்று அவனை பயமுறுத்தினர்.

ஆனால் குணவர்மணா, "இதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன்!" என்று சொல்லிவிட்டு, கிரந்தங்கள் இயற்றப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினான். நான்கே நாள்களில், அவற்றின் சாரத்தை குணவர்மன் நன்றாக கிரகித்துக் கொண்டான். **(தொடரும்)**




- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: மெக்சிக்கோவின் புவெனா விஸ்டா நகரில் அம்ரிக்கப் படைகள் மெக்சிக்கோ படைகளைத் தோற்கடித்தன.
- 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மிசிசிப்பியில் இராணுவ ஆட்சி முடிவடைந்து அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைக்கப்பட்டது.
- 1893 - ருடொல்ஃப் டீசல் டீசல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1903 - கியூபா குவாண்டானமோ விரிகுடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிவற்ற குத்தகைக்குக் கொடுத்தது.
- 1904 - 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்டது.
- 1905 - ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதன் மூலம் பெப்ரவரி புரட்சி ஆரம்பமானது.
- 1919 - இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.
- 1941 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது.
- 1944 - செச்னிய மற்றும் இங்குஷ் மக்கள் கட்டாயமாக மத்திய ஆசியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப் படைகளினால் விடுவிக்கப்பட்டது.
- 1947 - அனைத்துலக தரநிர்ணய தாபனம் (ISO) ஆரம்பிக்கப்பட்டது.
- 1966 - சிரியாவில் இடம்பெற்ற இராணுவப்புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1991 - தாய்லாந்தில் இராணுவத்தலைவர் சுந்தொங் கொங்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச்சாய் சூன்ஹாவென் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.
- 1997 -ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது.

### பிறப்புகள்

- 1633 -சாமுவேல் பெப்பீசு, பிரித்தானியக் கடற்படைத் தளபதி (இ. 1703)
- 1868 - டபிள்யூ. இ. பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க சமூக உரிமையாளர் (இ. 1963)
- 1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர்
- 1924 - அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (இ. 1998)
- 1965 - மைக்கேல் டெல், டெல் நிறுவனத்த்தை ஆரம்பித்தவர்.
- 1954 - ராஜினி திராணகம, இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும். (இ. 1989)
- 1983 - அசீஸ் அன்சாரி, அமெரிக்க நடிகர்

### இறப்புகள்

- 1503 - அன்னமாச்சாரியார், கர்நாடக இசைக் கலைஞர் (பி. 1408)
- 1719 - சீகன் பால்க், ஜேர்மனிய மதகுரு (பி. 1682)
- 1821 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (பி. 1795)
- 1848 - ஜான் குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6ஆவது குடியரசுத் தலைவர் (பி. 1767)
- 1855 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலர் (பி. 1777)
- 1973 - டிக்கின்சன் ரிச்சார்ட்ஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு

...அது மட்டுமல்ல ரஜினி கொடுக்கும் சாக்லெட்டை தூக்கி எறிகிறாள் பூங்கொத்தை வீசி எறிகிறாள்.

இந்நிலையில், ரஜினி நடித்த **"அன்னை ஓர் ஆலயம்"** படம், அனாதை இல்லக் குழந்தைகளுக்குத் திரையிட்டுக் காண்பிக்கப்படு கிறது.

தாயிடம் ரஜினி காட்டும் அன்பு, பிடித்து வைத்திருந்த மிருகங்களையெல்லாம் தாயின் விருப்பப்படி அவர் விடுதலை செய்வது, படத்தின் இறுதியில் தாய் யானையுடன் குட்டி யானையை சேர்த்து வைப்பது போன்ற காட்சிகள் ரோசியிடம் பெரிய மனமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. ரஜினியிடம் மிகுந்த அன்பு கொள்கிறாள். டெலிபோன் செய்து மன்னிப்பு கேட்கிறாள்.

அதன் பிறகு ரஜினிக்கு ரோசி கடிதம் எழுத, அவளுக்கு ரஜினி பதில் எழுத இருவருக்குமிடையே அன்பும், பாசமும் வளருகின்றன.


**அம்பிகாவின் குழந்தை**

இதற்கிடையே, தன் குழந்தை தான் ரோசி என்ற உண்மை அம்பிகாவுக்குத் தெரிகிறது.

அம்பிகா வாழ்க்கை பற்றிய "பிளாஷ்பேக்":

அம்பிகா ஒரு பணக்காரரின் (செந்தாமரையின்) மகள். தந்தைக்குத் தெரியாமல் காதல் திருமணம் செய்து கொள்கிறார். தம்பதிகள் ஒரு நாள் மட்டுமே மகிழ்ச்சியுடன் வாழ்கிறார்கள். மறுநாள், செந்தாமரையின் ஆட்களால் அம்பிகாவின் கணவன் கொல்லப்படுகிறான்.

ஒரே ஒரு நாள் கணவனுடன் வாழ்ந்த வாழ்க்கையால், அம்பிகா ஒரு குழந்தைக்கு தாயாகிறார். பிறந்தவுடனேயே, செந்தாமரையின் சூழ்ச்சியால் குழந்தை பிரிக்கப்பட்டு கருணை இல்லத்தில் சேர்க்கப்படுகிறது. மறுமணம் செய்து



ரஜினி- அம்பிகா படம் -அன்புள்ள ரஜினிகாந்த்

கொள்ள மறுத்து, கருணை இல்லத்தில் ஆயாவாகச் சேருகிறார், அம்பிகா.

சொந்தக் குழந்தைக்கே ஆயாவாக இருக்க நேரிட்ட அவலத்தை எண்ணி கலங்கும் அம்பிகா, ரோசி தன் குழந்தை என்பதை வெளிப்படுத்த துடிக்கிறார். ஆனால், ரோசிக்கு இதய நோய் அதிக சந்தோஷமோ, அதிக துக்கமோ ஏற்பட்டால் அவள் இறந்து விடுவாள் என்பதை அறிந்ததால், உண்மையை வெளிப்படுத்த முடியாமல் குமுறுகிறார்.

இதையெல்லாம் அறியும் ரஜினி, பெரிய டாக்டர்களையெல்லாம் அழைத்து ரோசியைக் காப்பாற்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறார். ஆனால் பலன் இல்லை. அம்பிகாதான் தன் தாயார் என்பதை அறிந்து கொண்டு அவரை அம்மா? என்று அழைத்தபடி உயிர் விடுகிறாள், ரோசி.

உள்ளத்தை தொடும் காட்சிகள் இந்தப் படத்தை டைரக்ட் செய்தவர் கே.நட ராஜ். நடிப்புப் பயிற்சி கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியவர். ரஜினியின் நண்பர். படத்தை விறு விறுப்புடன் இயக்கி இருந்தார். படம் முழுவதும், உள்ளத்தைத் தொடும் காட்சிகள் நிறைந்திருந்தன.

ரஜினிகாந்த், கடினமான கதாபாத்திரங்களையும் லேசாக ஊதித் தள்ளுபவர். ரஜினி, ரஜினியாக நடிப்பது சிரமமா என்ன? இயல்பான ரஜினியைக் காணவேண்டுமானால், இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும்.

சிறுமியாக இருக்கும்போதே மீனாவிடம் நல்ல நடிப்புத் திறமை இருந்ததை இப்படம் உணர்த்தியது. அதனால்தான் குமரியான பிறகு **"முத்து"** படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க முடிந்தது. மீனாவின் கனவில், "முத்து மணி சுடரே வா முல்லை மலர் சரமே வா!" என்று ரஜினி பாடி ஆடும் காட்சி கண்ணுக்கு குளிர்ச்சி.

ரஜினிகாந்த் கிருஷ்ணதேவராயராகவும், கே.பாக்யராஜ் தெனாலி ராமனாகவும் நடித்த ஓரங்க நாடகம், வயிறு வலிக்க சிரிக்க வைத்தது. மணிமாலா, அம்பிகா ஆகியோரும் பாத்திரத்தை உணர்ந்து நடித்தனர். ரஜினி வாழ்க்கையில் ஒரு மைல் கல்லாக விளங்கிய **"அன்புள்ள ரஜினிகாந்த்"**, 2-8-1984 இல் வெளிவந்து, நூறு நாட்கள் ஓடியது.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 85

....பேறுகாலம் ஆன பொம்பளைக்கு முப்பது நாளைக்கு இருக்கும் தீட்டு.

பொம்பளைக மூணுமாசம் வரைக்கும் தீட்டிப்புடும் போட்டு.

கருவாச்சியக் கரகரகரன்னு தேச்சுக் கழுவி வந்தவ யாத்தேன்னு அலறிட்டா.. அவ உயிர்தலத்த உத்துப்பாத்ததும்.

இடி பாதகத்தி மகளே! பூவா இருக்க வேண்டிய எடத்தப் புண்ணா வச்சிருக்கிறியா!

புண்பட்ட எடத்தப் புகையவிட்டு ஆத்துன்னு அதுக்கொரு வைத்தியம் ஆரம்பிச்சுட்டா ரங்கம்மா.

ஒரு ம்ஞ்சட்டியில அடுப்புக் கங்குள அள்ளிக்கொட்னா.

அதுல சாம்பிராணிய அள்ளி எறிஞ்சா.

அதுமேல ஆவாரங்குழை பரப்பி அதுக்குமேல வேப்பங்குழைய வச்சா.

சட்டியில இருந்த சந்துகள்ல வெள்ளப்பூடுத் தொலியையும் அள்ளிப் போட்டா.

சுவத்தப் புடிச்சு நின்னுக்கிட்டுக் கால்ரெண்டையும் அகட்டி வையடி ஆத்தான்னு அதட்டுனா.

சீலயத் தெரட்டிச் சுருட்டி ரெண்டு காலையும் அவ அகட்டி நிக்க காலுக்கு மத்தியில மஞ்சட்டிய நீட்டி இவ புகை மூட்டம் போட கவுட்டுவழி போகுதய்யா புகை மண்டலம் புண்பட்ட எடம் தேடி.

ஆவி புடிச்ச பொம்பளைய தேரவா அணச்சுப் பாயில படுக்க வச்சாக.

தோலெல்லாம் திட்டுத்திட்டா ரத்தம் கட்டிப் பிசுக்கு ஒட்டி கெடந்த பெறந்த பிள்ளையத் துக்கி உடம்பெல்லாம் நசநசன்னு நல்லெண்ணெயத் தடவி கம்மாக் கரம்பையத் தேச்சுக் கழுவி விடவும் சுத்தம் பளபளன்னு கண்ணாடி மாதிரி ஆகிப்போனான் கருவாச்சி மகன்.



குளிப்பாட்ன பிள்ளைக்கு லேசா சாம்பராணி காட்டி ஆத்தாளோட சேத்துவிடவும் அது மொதல் மொதலா வாய்பொருத்துது மொலையில.

சப்புது பிள்ள தாய்ப்பால் இல்ல.

பேறுகாலம் பாக்க ஆத்தா இல்லையேங்கிற வருத்தத்தில கடைசிப் பத்துநாளா அன்னந்தண்ணி இல்லாம அழுதுகிட்டேயிருந்தவளுக்கு குழாயத் திருகி விட்டமாதிரி கொட்டாவா போகுது பாலு?

ஏலே கொண்ணவாயா! வெள்ளாட்டம்பால் இருந்தாப் பீச்சி வெரசாக் கொண்டாடா.

எங்க போயிப் புடிச்சானோ எத்தன ஆட்டுல பீச்சினானோ? கால் மணி நேரத்துல ஓடி வந்துட்டான் அரைக் காச் சொம்புப் பாலோட.

ஆட்டுரோமம் பால்ல கெடந்தா மாட்டிரும் பிள்ளைக்குன்னு வெறும் துணியில வடிகட்டி சங்குல ஊத்துனா பால. பண்ணருவா எடுத்தா.

அத உள்ளடுப்புல போட்டு ஓரம் சுடவச்சா. சுட்ட பண்ணருவா மூக்க சங்குல செலுத்த சுர்ர்ன்னு சத்தம் போட்டுச் சுட்டுட்டேன்னு சொல்லுச்சு பாலு புகட்டிட்டா வைத்தியச்சி.

தாயில்லாத பிள்ளைக்கும் தாய்ப்பால் இல்லாத பிள்ளைக்கும் ஆடும் மாடும்தான ஆத்தா.

தேனிச்சந்தைக்குப் போயி திருக்கை மீன் கருவாடும் நெத்தலியும் வாங்கிட்டு வரணும்.

அதுல பச்சப்பூடு போட்டுக் கொழுப்பு வச்சுக் குடுத்தாப் பால்கட்டும் பச்ச ஒடம்புக்காரிக்கு.

நாலு ஆளுக கம்பு சுத்தி என்னிய வளச்சு வளச்சு அடிச்சமாதிரி மேலு காலு வலிக்குது.

பேய்பசி பசிக்குது. இப்ப என்ன குடுத்தாலும் திம்பேன். எதாகிலும் குடுங்க. வைத்தியச்சியையும் பவளத்தையும் கெஞ்சிக்கேக்குறா கருவாச்சி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைப் பயன்படுத்தும் மிகவும் பழைய முயற்சியாகும்!

## மனோகணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் அமைச்சர்கள் விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்காரது உதய கம்மன்பில ஆகியோர் முன்னின்று நுகேகொடை அங்காடிக்கு எதிரே நடத்திய கூட்டம் இனவா தத்தை தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்த நினைக்கும் ஒரு மிகப்பழைய முயற்சியாகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**



இந்தக் கூட்டத்தை கண்டு தமிழ பேசும் மக்கள் பதற்றமடைய தேவையில்லை. இந்த நாட்டை மீண்டும் வரலாற்றை நோக்கி திருப்பி அழைத்து போகும் இந்த முயற்சி ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பையும், சுதந்திர கட்சியையும் பிளவுபடுத்துவதிலேயே போய் முடியும்.

தங்களை தாங்களே பிளவுபடுத்திக் கொண்டு பலவீனப்படும் வேலையை இவர்களே செய்து கொள்கிறார்கள். இது இந்த நாட்டில் வாழும் ஜனநாயக சக்திகளுக்கு சாதகமானது. எனவே முடிந்து போன காட்டாட்சி மீண்டும் தலையெடுத்து விடுமோ என்று நுகேகொடை கூட்டம் குறித்து தமிழ், முஸ்லிம் மக்கள் பதற்றமடைய தேவையில்லை.

இது 1950 ஆம் ஆண்டுகால கட்டம் இல்லை. இன்று காலமும். உலக மும் மாறி விட்டன. இனவாதம் பேசும் இவர்களை இவர்களே அழித்துக்கொள்வார்கள்.

எமக்கு முன்னே இன்று இரண்டு கடமைகள் உள்ளன. முதலாவது, இந்த இனவாதிகளை தூண்டிவிடும் கருத்துகளை கூறுவதை தவிர்ப்பது ஆகும். அடுத்தது, எமது சொந்த அரசியல் பலத்தை ஜனநாயக ரீதியாக பலப்படுத்திகொள்வது ஆகும். இவற்றை மனதில் கொண்டு நாம் காரிய மாற்றுவோம்.

கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற வாராந்த ஜனநாயக இளைஞர்களுடனான கலந்துரையாடலில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு எதிரான மக்கள் இயக்கத்தில் பத்து ஆண்டுகளுக்கு மேல் இடம்பெற்று உழைத்த எனக்கு இன்றைய நிலவரம் பற்றி மக்களுக்கு எடுத்து கூறும் கடமை இருக்கிறதாக நம்பு கிறேன்.

நுகேகொடையில் மகந்தவாதிகள் நேற்று முன்தினம் மாலை நடத்திய கூட்டம் நடைபெற்ற இடம் என் இல்லத்துக்கு மிக சமீபமானதாகும். உண்மையில் இந்த கூட்டம் நடைபெறுவதற்கு முன்னரும், நடைபெற்ற வேளையிலும் அந்த பகுதியை நெருங்க அனுமதிக்கப்பட்ட தூரத்தில், அடையாளம் தெரியாத முறையில் நான் வாகனத்தில் உலா வந்து, பிரதான உரைகளை நேரடியாக கேட்டேன்.

அங்கே வந்த கூட்டம் மிகப் பெரிய கூட்டம் அல்ல. ஊடக படங்களை கண்டு மிரண்டு விட வேண்டாம். நிழல் படங்களில் ஒரு ஆயி ரம் பேர் பத்து ஆயிரமாகதான் தெரிவர்ர்கள். இது இயல்பானது. பெரும் பாலான மகிந்தவாதிகள் அங்கு வந்தனர். அத்துடன் கணிசமானோர், ஒரு பரபரப்பு ஆவலுடன், என்ன நடக்கின்றது என்பதை காணவும் வந்தனர். இது போன்ற சந்தர்ப்பங்களில் வேடிக்கை பார்க்க கணிசமானோர் வருவது ஆச்சரியமானது அல்ல.

எது எப்படி இருந்தாலும் இது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு ஆகியவற்றின் உள் விவகாரம். இந்த கூட்டமைப்பில் அல்லது இந்த கட்சியில் ஒரு பிளவு ஏற்பட போவதை இது காட்டுகிறது. அது இந்த நாட்டின் முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகளுக்கு சாதகமானது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# வீரவன்சவின் மனைவி கைது செய்யப்படுவார்

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்ச விரைவில் கைது செய்யப்படுவதற்கான அதிக வாய்ப்புகள் இருப்பதாக பொலிஸ் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சஷி வீரவன்ச, கடந்த காலங்களில் இரண்டு கடவுச்சீட்டுகளை பயன்படுத்தியுள்ளதுடன் அவற்றை பெறுவதற்காக வழங்கிய தகவல்கள் ஒன்றுக்கொன்று முரணானவை என கண்டறியப்பட்டன.

இந்த செய்தி பத்திரிகைகளில் வெளியாகியதுடன் புலனாய்வுப் பிரிவினருக்கு அது சம்பந்தமாக முறைப்பாடு கிடைத்தது. புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளில் பிரதிபலனாக சஷி வீரவன்ச கைது செய்யப்பட உள்ளார்.

போலி ஆவணங்களை பயன படுத்தி கடவுச்சீட்டுக்கள் பெற்றமை தொடர்பில் நடத்திய விசாரணைகளில் மேலும் இரண்டு விடயங்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடுத்த இரண்டு நாட்களுக்குள் இந்த இரு விடயங்கள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவடைந்ததும் வீரவன்சவின் மனைவி கைது செய்யப்படுவார் என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் நுகேகொடையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச, தனது மனைவியிடம் வாக்குமூலத்தைக் கூட பதிவு செய்து கொள்ள பொலிஸ் அதிகாரிகள் வரவில்லை எனவும் பொலிஸ் அதிகாரிகள் வீட்டுக்கு வரும் வரையில் காத்திருந்ததாகவும் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அமெ.அரசியல் வாதிகளுக்கு வழங்கிய நிதி புதிய அரசாங்கத்தினால் முற்றாக முடக்கம்

(கொழும்பு)

இலங்கை பற்றிய பிரதிபலிப்புக்களை மேம்படுத்தும் நோக்கில் மகிந்த அரசாங்கத்தால் அமெரிக்க அரசியல்வாதிகளுக்கு வழங்கப்பட்ட நிதியை நிறுத்துவதற்கு புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்துள்ளார்.

மகிந்த அரசாங்கத்தின் ஆட்சியின் கடைசி சில மாதங்களில் அரசியல் மற்றும் பொருளாதார இலாப நோக்கங்கருதி பெருந்தொகை பணம் இவ்வாறு செலவிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.



2014ஆம் ஆண்டு எட்டு ஒப்பந்தங்களுக்காக மாதாந்தம் ஐயாயிரம் அமெரிக்க டொலர் முதல் 75 ஆயிரம் அமெரிக்க டொலர்கள்வரை, கடந்த அரசாங்கத்தால் வெளிநாட்டு அரசியல் வாதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கால அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையினால் குறைந்தபட்ச அனுகூலங்களே கிடைத்துள்ளதாகவும் அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மெய்வல்லுநர் போட்டி இன்று

(பொற்பதி)

யாழ்.வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன், மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரவியராசா, தாளையடி பங்குத்தந்தை ம.இரேட்ணம் மற்றும் உதவிப்பங்குத்தந்தை ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (இ-3-64)

# ஈழத்தை வழங்கினால் மட்டுமே மகிந்தவால் வெற்றிபெற முடியும்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, வடக்கு கிழக்கு மக்களுக்கு தான் வழங்கிய வாக்குரிமை காரணமாகவே அவர் தோல்வியடைந்ததாக கூறியுள்ளதாகவும் அப்படியானால், ஈழம் வழங்கப்பட்ட நாட்டில் மாத்திரமே மகிந்த வெற்றி பெற முடியும் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி வடக்கு, கிழக்கு மக்களுக்கு தானே வாக்குரிமையை வழங்கியதாகவும் அதனை வழங்கியிருக்காவிட்டால், அவரே வெற்றி பெற்றி ருப்பார் என தங்காலையில் கூறி யிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் இந்த கருத்து முற்றிலும் ஈழவாத கருத்து என கண்டிப்பதாகவும் மங்கள தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பின் நாட்டில் இனவாதத்திற்கும், மதவாதத்திற்கும் இனி இடமில்லை என்பதற்கான பாடத்தை மக்கள் கற்றுக் கொடுத்துள்ளனர்.

இந்த சமிக்ஞையை முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சியினரும் புரிந்து கொள்ள வேண்டும். எந்த அடிப்படைவாதத்திற்கும் நாம் மேலும் இடமளிக்க தேவையில்லை.

ஒழுக்கமான உலகம் அவற்றை புறந்தள்ளியுள்ளது. இன, மத வாதங்களால் பட்ட துன்பங்கள் போதும். இதனால், சிங்கள அடிப்படைவாதத்தை மாத்திரமல்ல, தமிழ, முஸ்லிம் அடிப்படைவாதத்தையும் நாம் புறக்கணிக்க வேண்டும் எனவும் மங்கள சமரவீர கூறியுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் கோட் 14 கோடி ரூபா!



(சூரத்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வருகையின்போது பிரதமர் நரேந்திர மோடி அணிந்திருந்த அவரது பெயர பொறித்த கோட் 4.31 கோடி ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது. அதை குஜராத் வைர வியா பாரியும் அவரது மகனும் சேர்ந்து விலைக்கு வாங்கியு ள்ளனர்.

அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா டில்லி வந்து சென்றார். அப்போது, 'நரேந்திர தாமோதர் தாஸ்' என்று பெயர் பொறிக் கப்பட்ட கோட் அணிந்திருந்தார் பிரத மர் மோடி. இதன் விலை 10 இலட்சம் ரூபா என்று கூறப் பட்டது. இதை காங்கிரஸ் துணை தலைவர் ராகுல காந்தி உட்பட பலர் கிண்டல் செய்தனர்.

ஆனால், மோடி அணி ந்த கோட் ஏலம் விடப்படும், அதில் கிடைக்கும் தொகை, கங்கை நதி தூய்மைத் திட்ட த்துக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, சூரத் நகரில் கடந்த புதன் கிழமை காலை ஏலம் தொட ங்கியது. ஏலம் வெள்ளிக் கிழமை மாலை 5 மணி வரை நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. மோடி பதவியேற்ற பின் கடந்த 7 மாதங்களில் அவருக்கு வந்த 455 பரிசுப் பொருட் களும் ஏலத்துக்கு வந்தன.

முதல் நாள் புதன்கிழமை மாலையில் அதிகபட்சமாக குஜராத்தை சேர்ந்த வெளி நாட்டு வாழ் இந்தியர் விரால் சவுக்கி என்பவர், 1.11 கோடி ரூபாவுக்கு அந்த உடையை ஏலம் கேட்டார்.

கடந்த 20ஆம் திகதி மாலை 1.41 கோடி ரூபாவுக்கு ஏலத் தொகை உயர்ந்திருந் நதது.

நேற்று முன்தினம் காலை ஏலம்தொடங்கிய பிறகு கோட் விலை உயர்ந்து கொண்டே சென்றது.

கடைசியில் சூரத்தில் தர் மானந்தா வைர நிறுவனம் நடத்தி வரும் தொழிலதிபர் லால்ஜி படேல் அவருடைய மகன் ஹிதேஷ் படேல் இரு வரும் சேர்ந்து 4.31 கோடி ரூபாவுக்கு அந்த உடையை ஏலம் எடுத்தனர்.

இத்த கவலை மாவட்ட ஆட்சியர் இராஜேந்திர குமார் நேற்று முன்தினம் மாலை அறிவித்தார்.

ஏலத்தின் கடைசி ஒரு மணிநேரம் பெரும் குழப்பம் நிலவியது. பலரும் ஏலத் தொகையை உயர்த்தி மோடி யின் உடையை வாங்க மும் முரமாக இருந்தனர்.

இது குறித்து ஆட்சியர் இராஜேந்திர குமார் கூறிய போது, ஏலம் முடிந்த பிறகு கூட 5 கோடி ரூபாவுக்கு அந்த உடையை விலைக்குகேட்டனர்.

ஆனால், மாலை 5 மணி யுடன் ஏலம் முடிந்து விட்ட தால், அதை ஏற்கவில்லை என்றார்.

ஏலத்தில் 4.31 கோடி ரூபா கொடுத்து கோட் வாங் கிய லால்ஜி படேல் கூறுகை யில், நாட்டுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்து விட்டது. அந்த உடையை வாங்க பலரும் ஆர்வம் காட் டினர்.

அதன் மூலம் கிடைக்கும் பணம் கங்கை நதியை தூய் மைப்படுத்த செலவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள தால், எல்லோரும் நல்ல எண்ணத்துடன் ஏலத்தை அதிகரித்து கேட்டனர்.

ஆனால், மோடி அணிந்த கோட் எனக்குக் கிடைக்கும் என்று நான் நினைத்து கூட பார்க்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பன்றிக்காய்ச்சலினால் 778 பேர் பலியாகினர்!

**நாடு முழுவதும் பன்றி காய்ச்சலுக்கு பலி யானோர் எண்ணிக்கை 774 ஆக உயர்ந்துள் ளது. தமிழ் நாட்டில் பன்றிக்காய்ச்சல் அறிகுறி யுடன் சிகிச்சை பெற்று வந்த இராஜஸ்தான் முதி யவர் பலியானார். வடமாநிலங்களிலும், தெலு ங்கானா,கர்நாடகா மாநிலங்களிலும் பன்றி காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. தற்போது மேலும், 31 பேர் பலியாகி விட்டதால் பலியானோர் எண்ணிக்கை 774 ஆக உயர்ந்துள்ளது. இத்தக வலை மத்திய சுகாதார அமைச்சக அதிகாரி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நாடு முழுவதும் பன்றி காய்ச்சல் தாககியவர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 963 ஆக உயர்ந்துள்ளது.

**மாநில வாரியாக பலி**

இராஜஸ்தான் மாநிலத் தில்தான் பன்றி காய்ச்சல் பாதிப்பு அதிகமாக உள்ளது. அங்கு பன்றி காய்ச்சலுக்கு 206 பேர் பலியாகி உள்ள னர். 4 ஆயிரத்து 185 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குஜராத் மாநிலத்தில் 186 பேர் பலியானார்கள். 2 ஆயி ரத்து 637 பேர் பாதிக்கப்பட் டுள்ளனர்.

மத்தியபிரதேசத்தில் 103 பேர் பலியானார்கள். மரா ட்டிய மாநிலத்தில் 92 பேரும், தெலுங்கானா மாநி லத்தில் 51 பேரும், கர்நாட காவில் 33 பேரும், பஞ்சாப் மாநிலத்தில் 31 பேரும், அரியானா மாநிலத்தில் 20 பேரும் பலியாகி உள்ளனர்.

இதற்கிடையே, தலைமை மருந்து கட்டுப்பாட்டு அதி காரி ஜி.என்.சிங், அனைத்து மாநில மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளுக்கு ஒரு முக் கிய கடிதம் எழுதி உள் ளார்.

அதில், 'மருந்து கடை யின் முக்கியமான இடத்தில், 'இவ்விடம் பன்றி காய்ச்சல் மருந்துகள் கிடைக்கும்' என்று எழுதி வைக்குமாறு மருந்து கடைகளுக்கு உத்தரவிட வேண்டும் என்று அவர் கூறி யுள்ளார்.

பன்றி காய்ச்சல் மருந்து கள் தட்டுப்பாடின்றி கிடைப் பது குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்காக இம்மு டிவு எடுக்கப்பட்டுள்ளது.

**முதியவர் பலி**

இதற்கிடையே, பன்றி காய்ச்சல் அறிகுறியுடன் சேலம அரசு வைத்தியசா லையில் சிகி ச்சை பெற்று வந்த இராஜஸ்தான் மாநில த்தைச் சேர்ந்த முதியவர் அவஸ்தி (வயது -70) நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் உயிரிழந் தார்.

மேலும், தஞ்சை நாஞ் சிக்கோட்டை சாலை சணமு காநகரை சேர்ந்த அற்புத சாமியின் மனைவி மோலி மேரிக்கு (வயது-37) பன்றி காய் ச்சல் அறிகுறி இருப்பது இரத்த பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து அவருக்கு தஞ்சை மருத்துவ கல்லூரி வைத்தியசாலையில் தனி யறையில் வைத்து சிகி ச்சை அளிக்கப்பட்டு வரு கிறது என்பது குறிப்பிடத்தக் கது. (இ-5)

# பத்தாயிரம் கோடிரூபா ஊழல் பத்திரிகையாளரால் பரபரப்பு

எரிசக்தி துறையில் நடந்த 10 ஆயிரம் கோடி ரூபாய் ஊழலை மறைக்கும் முயற்சி யாகவே தான் கைது செய்யப் பட்டுள்ளதாக பெற்றோலிய அமைச்சக ஆவணங்கள் திருடப்பட்ட வழக்கில் கைதா னவர் கூறியுள்ளார். இத னால் பரபரப்பு ஏற்பட்டுள் ளது.

பெற்றோலிய துறை உட் பட பல்வேறு அமைச்சக ஆவணங்கள் திருடப்பட்டு, பெரு நிறுவனங்களுக்குவிற் கப்பட்டு வந்தது அண்மை யில் வெட்ட வெளிச்சமானது. இதில் அந்த அமைச்சக ஊழி யர்களே முக்கிய குற்றவா ளிகளாக கைது செய்யப்பட்டு ள்ளனர்.

இதில் பல இடைத்தரக ர்களும் இருந்துள்ளனர். இந்த முறைகேடு தொடர்பாக இதுவரை 7 பேர் கைது செய் யப்பட்டுள்ளனர். இதில் பல் வேறு அமைச்சக உயரதிகா ரிகளுக்கும், பெரும் தொழில் நிறுவன அதிபர்களுக்கும் தொடர்பு இருக்கலாம் என்று பொலிஸரால் சந்தேகிக்கப் படுகிறது.

இந்நிலையில் இந்த வழ க்கில் கைது செய்யப்பட்டுள்ள பத்திரிகையாளரான சைக் கியாவை நேற்று டில்லி நீதி மன்றத்தில் பொலிஸார் ஆஜ ர்படுத்தினர்.

அப்போது அவர் செய்தி யாளர்களை நோக்கி, எரி சக்தி துறையில் 10 ஆயிரம் கோடிரூபாய் அளவுக்கு முறை கேடு நடைபெற்றுள்ளது.

அதனை மறைக்கவே என்னை கைது செய்துள் ளனர் என்று கூச்சலிட்டார்.

இதனால் நீதிமன்ற வளா கத்தில் பெரும் பரபரப்பு ஏற் பட்டது. எனினும் வழக்கை திசை திருப்பும் நோக்கி லேயே அவர் இவ்வாறு பேசி யிருக்கலாம் என்று கூறப் படுகிறது. (இ-5)

பாரதச் செய்தி

# ஆவணங்களைத் திருடிய எவருமே தப்ப முடியாது!

## உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

மத்திய பெற்றோலியத் துறை அமைச்சக ஆவண ங்கள் திருடப்பட்டு வெளியி டப்பட்ட விவகாரத்தில் யாரும தப்ப முடியாது என உள் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்தார்.



டில்லியில் நேற்று செய் தியாளர்கள் கேள்விக்கு பதி லளித்த அவர், மத்திய பெற் றோலியத் துறை அமைச்சக ஆவணங்கள் திருடப்பட்டு வெளியிடப்பட்ட விவகார த்தில் ... குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும். டில்லி பொலி ஸார் தீவிர விசாரணை மேற் கொண்டுள்ளனர். விசார ணையில் உண்மை தெளி வாக தெரிய வரும்.

இந்த குற்றம் வெகு நாட்க ளாகவே நடந்து வந்திரு ... ஜனநாயக கூட்டணி அரசு இக்குற்றச் செயலை அம்பலப்படு த்திய தில் மகிழ்ச்சியே.

எங்கள் அரசு விழிப்பு டன் இருந்திருக்காவிட்டால், இது வெளிச்சத்துக்கு வந்திரு க்காது என்றார்.

பெற்றோலியத்துறை இர கசிய ஆவணங்களை, பணம வாங்கிக் கொண்டு கார்ப் பரேட் நிறுவனங்களுக்கு கொடுத்ததாகக் கூறி, பெற் றோலிய அமைச்சக ஊழிய ர்கள் 2 பேர் உட்பட 12 பேரை குற்றப்பிரிவு பொலி ஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்க ளிடம், எந்தெந்த நிறுவன ங்களுக்கு இரகசிய ஆவண ங்கள் விற்றார்கள் என்பது உள்ளிட்ட விபரங்களை குற்றப்பிரிவு பொலிஸார் விசா ரித்து வருகின்றனர்.

இரகசிய ஆவணங்கள் திருட்டுப் போவதைக் கண்ட றிய போலியான இரகசிய ஆவணங்களை டில்லி பொலி ஸார் உருவாக்கி வைத்து ள்ளனர். அவற்றைத் திருடி விற்க முயன்ற போது 5 பேரும் பிடிபட்டதாக கூறப்படுகிறது.

எண்ணெய் துரப்பணக் கொள்கை தொடர்பான ஆவ ணங்களை அவர்கள் திருடி யது விசாரணையில் தெரிய வந்துள்ளது என்பது குறிப்பி டத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஐ.நாவும்

## தமிழர்களுக்கான நீதியும்!



தமிழ் மக்கள் காலம் காலமாக தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக நீதி வேண்டி காத்திருக்கின்றார்கள். நீதி வேண்டிக் காத்திருத்தல் என்பது அதிகம் நம்பிக்கைகளினால் நிறைந்தது. ஆனால், அந்த நம்பிக்கைகள் பொய்த்து காத்திருத்தல் கொடும் கனவாக மாறிய வரலாறுகளே தமிழ் மக்களுக்கு மிஞ்சியிருக்கின்றன. அப்படியான தருணமொன்றை நோக்கியே தமிழ் மக்கள் நகர்த்தப்படுகின்றார்கள். இப்போது நம்பிக்கையின் அளவு அவ்வளவு அதிகமாக இல்லாததால் ஏமாற்றத்தின் அளவு அவ்வளவுக்கு பெரிதாக இருக்க வாய்ப்பில்லை.

இலங்கையின் இறுதி மோதல்களின் போது தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணையையும் அது தொடர்பிலான முன்னெடுப்புக்களையும் அப்படித்தான் கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில், அந்த விசாரணையோ, அதற்கான முன்னெடுப்புக்களோ அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளினால் உள சுத்தியோடு மேற்கொள்ளப்படவில்லை. மாறாக, தமக்கு இசைவற்ற இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு குடைச்சல் கொடுக்கும் கருவியாகவே அதனை முன் வைத்தன. மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு தமக்குச் சார்பானவர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டதும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் ஐக்கிய நாடுகள் விசாரணை மற்றும் அது சார்ந்த விடயங்களைக் கைவிடுவதற்கான முனைப்புக்களில் ஈடுபடுவது எதிர்பார்த்ததுதான்.

இலங்கையின் இறுதி மோதல்களின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை அறிக்கையை ஆறு மாத காலத்துக்கு ஒத்திவைப்பதற்கு ஐக்கிய நாடுகளின் உரிமைகள் ஆணையாளர் இளவரசர் ஷெயிட் ராட் அல் ஹுசைன் பரிந்துரையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை கடந்த திங்கட்கிழமை (பெப் 16, 2015) ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த ஒத்திவைப்பானது ஒரு முறை மாத்திரமே நிகழக்கூடியதென்றும் விசாரணை அறிக்கை இந்த வருடம் செப்டம்பர் மாதம் வெளியிடப்படும் என்றும் ஐக்கிய நாடுகளின் உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் ராட் அல் ஹுசைன் அறிவித்திருக்கின்றார்.

"இலங்கையில் மாறி வரும் நிலைமைகளில் இந்த அறிக்கையை பலப்படுத்தும் வகையில் மேலும் ஆதாரங்கள் கிடைக்கலாம். முன்னைய அரசாங்கத்தைப் போலல்லாது இலங்கையின் புதிய அரசாங்கம் மனித உரிமைகள் குறித்த பல விடயங்களில் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ள நிலையில், அவர்களது கடப்பாடுகளை யதார்த்தமாக்க எனக்கு இது உதவும். ஐக்கிய நாடுகளின் முன்னைய மனித உரிமைகள் ஆணையாளரான நவநீதம்பிள்ளை அவர்களுக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட மூன்று நிபுணர்களும் இந்த கால நீடிப்பு அவசியமானது என்று கூறியுள்ளனர். இலங்கை மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சியம் வழங்கியவர்களும் இந்த காலநீடிப்பு இதனை நீர்த்துப் போகச் செய்யும் விடயமாக எண்ணி அச்சம் கொள்ளலாம். ஆனால், பாதிக்கப்பட்டவர்களுக்கான பலமான குரலாக நாம் ஒலிப்போம் என்பதில் எந்த மாற்றமும் கிடையாது" என்றிருக்கிறார் ஷெயிட் ராட் அல் ஹுசைன்.

ஐ.நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு தொடர்பிலான ஷெயிட் ராட் அல் ஹுசைனின் மேற்கண்ட பதில், கேள்விகளுக்கு அப்பாலானது என்று தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்கிற ரீதியில் அமைந்துள்ளது. ஆனால், ஜனாதிபதித் தேர்தல் காலத்திலேயே தாய் நாட்டினை மீட்டுத் தந்த இராணுவத்தினரையோ, தளபதிகளையோ தண்டிப்பதற்கான சந்தர்ப்பங்களை என்றைக்கும் வழங்கப்போவதில்லை என்று அறிவித்துவிட்டுத்தான் மைத்திரிபால சிறிசேன களம் கண்டார். ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரிபால சிறி சேனவை முன்னிறுத்திய பொது எதிரணியும் அது தொடர்பில் தெளிவாக அறிவித்திருந்தது.

அத்தோடு, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணையொன்றுக்கு ஒத்துழைக்க முடியாது. அதற்கு இலங்கையின் இறைமை அனுமதிக்காது என்றும் அறிவித்திருந்தது. அதுபோக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் வழங்கும் உரோம் சட்டத்திலும் இலங்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. அப்படியான நிலையில், ஷெயிட் ராட் அல்ஹுசைன் சொல்வது போன்றதொரு நிலை ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவு. மாறாக, விசாரணையையும், அது தொடர்பிலான அறிக்கையும் நீர்த்துப்போகச் செய்யும் வாய்ப்பையே இந்தக் கால நீடிப்பு வழங்கும் என்று கொள்ள வேண்டியிருக்கின்றது.

"இலங்கைத் தமிழ் மக்களின் உரித்துக்களின் நிலை, அவர்களின் எதிர்பார்ப்புக்கள், அபிலாசைகள், தேவைகள், வருங்காலம் ஆகியன யாவும் இன்று ஒரு மயக்கமுற்ற நிலையை அடைந்துள்ளன. எமது நிலை, விளையாட்டுத்திடல் பந்து போன்று உலக அரங்கில் பலரின் உதைக்கும் எதிர் உதைக்கும், எறிவுக்கும் எதிர் எறிவுக்கும் ஆளாகி வருகின்றது." இது, கடந்த வாரம் வடக்கு மாகாண சபையில் "இறுதி மோதல்களின் போது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலைகளே" என்கிற தீர்மானத்தை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தது. கடந்த வாரப் பத்தியிலும் இதனைக் கோடிடப்பட்டிருந்தது. இப்போதும் அதனையே கோடிட வேண்டியிருக்கின்றது. ஏனெனில், உதைபடும் பந்தாக எம்மை உணரும் சந்தர்ப்பமொன்றின் உச்சகட்டமொன்றில் இப்போது இருக்கின்றோம். ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்தி வைப்பு அதனையே பிரதி பலிக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கையை வரும் மார்ச் மாதம் இடம்பெறும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் வெளியிடப்படக்கூடாது என்பதில் இலங்கையின் புதிய அரசாங்கம் பெரும் முனைப்போடு செயற்பட்டது. அதற்காக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, அமெரிக்காவின் இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியையும் சந்தித்திருந்தார். அதில் வெற்றியும் கண்டிருக்கின்றார். ஆறு மாதங்களுக்கு அந்த அறிக்கை ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், உள்ளக விசாரணைக்கான பொறிமுறை குறித்து புதிய அரசாங்கம் வாக்குறுதியளித்திருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தலொன்று இன்னும் மூன்று மாதத்துக்குள் வரவுள்ள நிலையில், இலங்கையின் புதிய அரசாங்கம் இறுதி மோதல்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான உள்ளக விசாரணையை முன்னெடுக்கும் என்று நம்புவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அதுவும், சிங்கள பௌத்த தேசியவாதத்தின் ஆணி வேரிலேயே அறுப்பைச் செய்யக் கூடிய விசாரணையொன்றை அதே சிங்கள பௌத்த தேசியவாத அரசாங்கம் முன்னெடுக்கும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். குற்றவாளிகளைக் காப்பாற்றுவது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு பாரிய கடப்பாடு இருக்கின்றது. அதுதான், அவர்களை சிங்கள மக்களிடம் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்கும். அப்படியான நிலையில், வெளிநாட்டு நிபுணர்களையோ, ஐக்கிய நாடுகளையோ நேரடியாக விசாரணைகளுக்காக களம் காண அனுமதிக்கும் வாய்ப்புக்கள் இல்லை.

இன்னொரு விடயத்தையும் அவதானிக்க முடிகின்றது. இலங்கை மீதான ஐக்கிய நாடுகளின் விசாரணை அறிக்கை வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட்டால் அது, மஹிந்த ராஜபக்ஷ சார்ப்பு சிங்கள பௌத்த தேசியவாதிகளை மீண்டும் ஆட்சியில் அமர்த்துவதற்கான வாய்ப்புக்களை வழங்கலாம். நியாயமான விடயங்களை விசாரணையாளர்கள் அறிக்கையில் கோடிட்டு குற்றவாளிகளை தண்டிப்பதற்கான சூழ்நிலை ஏற்பட்டால் அது, இலங்கையில் தாம் திட்டமிட்டு உருவாக்கிய தம் சார்ப்பு அரசாங்கத்தை மாற்றுவதற்கான சூழலையும் ஏற்படுத்திவிடும் என்று அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் கருதியிருக்கலாம். அதுவும், விசாரணை அறிக்கை ஒத்திவைப்புக்கு காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

கடந்த பத்து ஆண்டுகளாக தமக்கு சார்பற்ற அரசாங்கமொன்று இலங்கையில் இருந்தது என்பதை அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகள் உணர்ந்திருக்கின்றன. அப்படியான நிலையில், அவ்வாறானதொரு அரசாங்கத்தை மீண்டும் கொண்டுவருவதற்கான சூழ்நிலையை எந்தவொரு தருணத்திலும் அனுமதிக்காது. அதனை, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலின் இலங்கை விஜயமும் உணர்த்தியது. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சந்திப்பின் போது, அவர் முன்வைத்த விடயங்கள், இலங்கையின் புதிய அரசாங்கத்தை தக்க வைப்பதற்காக எவ்வளவு விட்டுக் கொடுப்புக்களையும் செய்வதற்கு அமெரிக்கா தயார் என்பதான செய்தியைச் சொல்லியிருந்தது. அப்போதே, இலங்கை மீதான ஐ.நாடுகள் விசாரணை அறிக்கை வரும் மார்ச் மாதம் வெளியிடப்படமாட்டாது என்பது தெளிவாகிவிட்டது.

ஐ.நாடுகளின் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு விடயத்தை (யும்) முன் வைத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கட்சி பெரும்பான்மையுள்ள அரசாங்கமொன்றை அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடும். ஏற்கனவே, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் செய்த ஊழல்களை மெல்ல மக்களுக்கு காட்டி வருகின்றது. ஊழல்களுக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்தாமல் சரியான கால இடைவெளியில் தேர்தல் காலம் நெருங்க நெருங்க அதனை வெளிப்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மீதான குற்றச்சாட்டுக்களை அடுக்க நினைக்கின்றது.

அதனையே, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மிக கச்சிதமாக முன்னெடுக்கின்றார். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு நிறைவேற்று நாடாளுமன்றம் அமைக்கப்படும் போது, தனிப் பெரும்பான்மையுள்ள அரசாங்கத்தை அமைப்பதே தன்னை நிலைபெற வைக்கும் என்பதில் அவர் தெளிவாக இருக்கின்றார். அதற்கான ஒத்துழைப்பையே ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பினூடும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளும் வழங்கியிருக்கின்றன.

இவ்வாறான நிலையில்தான், ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகள் என்ன கருத்தை வெளிப்படுத்துவது என்று தெரியாமல் அல்லாடுகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஐக்கிய நாடுகளின் அறிக்கை ஒத்திவைப்பு என்பது கவலையோ, மகிழ்ச்சியையோ அளிக்கவில்லை என்றிருக்கின்றார். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு மகிழ்வளிக்கவில்லை என்றிருக்கின்றார். ஆனால், அந்த கால எல்லை புதிய ஆதாரங்களை விசாரணை அறிக்கையில் சேர்க்க உதவக்கூடும் என்றும் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கை மீது சர்வதேச விசாரணை வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, "விசாரணை அறிக்கை ஒத்திவைப்பு காலத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு வந்து நேரடியாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வாக்கு மூலங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்." என்று வலியுறுத்தியிருக்கின்றது. ஆனால், தமிழ் மக்கள் ஓரளவுக்கு தெளிவாக இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி என்பது சர்வதேச அரசியலுக்குள் சிக்கிவிட்ட தமிழ் மக்களுக்கு இலகுவாக கிடைத்துவிடாது. ஆக, இவ்வாறான சர்வதேச மாயைகளுக்குள் அதிகம் நம்பிக்கை கொள்ளாமல் அடுத்த கட்டம் நோக்கி நகர்வதற்கான முயற்சிகளை நாமே எடுக்க வேண்டும் என்பதே அது.

-மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நிறைவேற்றுப் பேரவையில் சு.க.பங்கேற்கப் போவதில்லை!

## அனுர பிரியதர்சன யாப்பா திட்டவட்டம்

(கொழும்பு)

தேசிய நிறைவேற்றுப் பேரவையில் பங்கேற்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது. அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத்திட்டத்தை கண்காணிக்கும் நோக்கில் தேசிய நிறைவேற்றுப் பேரவை நிறுவப்பட்டுள்ளது. இந்த நிறைவேற்றுப் பேரவையில் பங்கேற்கப் போவதில்லை என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.



எதிர்வரும் வாரத்தில் நிறைவேற்றுப் பேரவையில் தமது கட்சி அங்கம் வகிக்கும் என சில ஊடகங்களில் வெளியிடப்பட்ட தகவல்களில் உண்மையில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளின் தேவைக்கு ஏற்பவே தேசிய நிறைவேற்றுப் பேரவை உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய நிறைவேற்றுப் பேரவையில் அங்கம் வகிக்குமாறு இது வரையில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு எதனையும விடுக்கவில்லை என அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# மத்தள விமான நிலையம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்காக பாரியளவு கடன் வட்டி

## அமைச்சர் அர்ஜீன தெரிவிப்பு



மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியவற்றுக்கு பாரியளவு கடன் வட்டி செலுத்த நேரிட்டுள்ளதாக அமைச்சர் அர்ஜீன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியனவற்றுக்காக பாரியளவில் கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கடன்களுக்காக மிகக் கூடுதலான வட்டித் தொகையை செலுத்த நேரிட்டுள்ளது.

எவ்வாறெனினும் அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாம் பகுதியின் இரண்டாம் கட்ட பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் அதனை தொடர்ந்தும் முன்னெடுக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகம் ஆகியன தொடர்பில் எவ்வாறான தீர்மானம் எடுப்பது என்பது குறித்து எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்படும்.

தேசியப் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களை கருத்திற் கொண்டே தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் அர்ஜீன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்திலும் தேர்தல் முறைமையிலும் மாற்றம் அவசியம்!


(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரத்தை குறைப்பதோடு தேர்தல் முறையை மாற்றுதல் என்பன ஒரே நேரத்தில் இடம்பெற வேண்டும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தெரிவித்துள்ளது.

நிலையான பாராளுமன்றத்தை அமைக்கும் வகையில் தேர்தல் முறையை மாற்ற வேண்டும் என தேசிய அமைப்பாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் தொடர்பாக விசேட குழு அமைத்து, பேச்சு வார்த்தைகள் இடம் பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எங்கள் கட்சி நிலையானது தான். அரசியலமைப்பின் நிறைவேற்று அதிகாரங்களை பாரிய அளவில் குறைக்கப்படல் அல்லது நிறைவேற்று அதிகாரங்களை ஒழித்தலுக்கு இணையாக நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான அரசாங்கத்தை உருவாக்கலாம் என தேசிய அமைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.



எனவே அதற்காக பாராளுமன்றம் நிலையானதாக காணப்படல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் தேர்தல் முறையானது நிலையான பாராளுமன்றத்தினை உருவாக்குவதாக அமைய வேண்டும். அதற்காக பாராளுமன்றத்தின் தேர்தல் முறையில் மாற்றம் ஒன்றினை காண வேண்டிய அவசியம் உள்ளதாக கட்சி வட்டாரங்களில் பேசப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# இ.போ.சவுக்கு மகிந்த 14 கோடி ரூபா கடன்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இலங்கை போக்குவரத்து சபைக்கு 14 கோடியே 25 இலட்சம் ரூபாவை கடனாக வழங்க வேண்டும் என போக்குவரத்து அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பிரசாரக் கூட்டங்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இதற்காக 14 கோடியே 25 இலட்சம் ரூபாவை வாடகைப் பணமாக மகிந்த வழங்க வேண்டும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## வாழை

வாழைமரம் நம்ம வாழ்க்கையோடு இணைந்துவிட்டது. அதனுடைய ஒவ்வொரு பாகமும் நமக்கு உதவி செய்கிறது. அதைப் புரிந்துகொண்டோம் என்றால் வாழையினுடைய பயனை நாம் முழுமையாக அனுபவிக்கலாம்.

சாப்பிடுவதைத்தான் சாப்பிடுகிறோம். எதில் சாப்பிட்டால் என்னவென்று நினைக்கக்கூடாது. வாழை இலையில் சாப்பிட்டால் அதற்கு எப்பவுமே மவுசு கூடத்தான். முதலில் இதிலிருந்து சுத்தம். நாம் மட்டும்தான் அதில் சாப்பிடுவோம். பின்பு அதை அப்புறப்படுத்திவிடுவோம். அது மட்டுமில்லை. யார் ஒருத்தர் தொடர்ந்து வாழையிலையிலேயே சாப்பிட்டுக் கொண்டு வருகிறாரோ அவருக்குத் தலைமுடி கறுப்பாகவே இருக்குமாம். விரைவில் நரைக்காதாம்.

புராண ரீதியாகப் பார்த்தால் வாழை இலையில தனலட்சுமி வாசம் செய்வதாகச் சொல்கிறார்கள். வாழையிலையில் தொடர்ந்து சாப்பிட்டால் முகம் பளபளப்பாகி அதில் அழகும் வசீகரமும் உண்டாகும். வாழையிலைக்கு அத்தகைய மருத்துவ குணம் உண்டாம்.

தீப்பட்டு வெந்தப் புண்ணில், கொதிக்கும் எண்ணெய் பட்ட இடத்தில் வாழை இலையினுடைய மெல்லிய குருத்தை பிரித்து எடுத்து வைத்துக் கட்டினால் எரிச்சல் நீங்கிவிடும். அந்த இடத்தில் கொப்புளம் வராமல் காயம் விரைவில் ஆறிவிடும். ஆறாத ரணங் களுக்கு மெல்லிய துணியில் தேங்காயெண்ணெய்யைத் தடவி மேலே போட்டு வாழை இலையை வைத்துக் கட்டினால் ரணம் விரைவில் ஆறிவிடும்.

வாழைப்பூவினுடைய மகத்துவத்தையும் நாங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். அதைச் சமைக்கிறதையும் சாப்பிடுகிறதையும் கூட சிலபேர் சிரமமாக நினைக்கிறார்கள். ஆனால் சாப்பிட்டுப் பழகிவிட்டால் இதனால் கிடைக்கிற பலம் அதிகம் என்பதை அவர்கள் உணர்வார்கள். பித்தத்தால் வருகின்ற நோய்கள், மூலக்கடுப்பு, கைகால் எரிச்சல் இன்னும் பல தொந்தரவுகளுக்கு இது நிவாரணமாக அமையும்.

பத்தியப் பதார்த்தங்களை வாழைப்பிஞ்சுக்கு ரொம்ப முக்கியத்துவம் உண்டு. இரத்தமூலம், கடுப்பு, அடிவயிற்று ரணம் இவைகள் இது போக்குமாம்.

வாழைக்காயைச் சமைத்துச் சாப்பிட்டால் இரத்த விருத்தி உண்டாகும். உஷ்ண இருமல், பித்த வாந்தி, வாயில் நீர் ஊறிக் கொண்டேயிருக்கிறது. இந்த மாதிரிக் கோளாறுகளை இது நீக்குதாம்.

வாழைப்பழத்தினுடைய பெருமையை உங்களுக்கு விபரித்து சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை.

வாழைப்பட்டைக்கு இலையினுடைய குணங்கள் அத்தனையும் உண்டு. பல அபூர்வ மூலிகைகளை இந்தப் பட்டைக்குள்ளே வைத்துக்கட்டுவார்கள். அதனால் பல நாட்கள் அந்த மூலிகை பசுமையாகவே இருக்குமாம். கற்றாழை நாரைப் போல இதிலேயும் நார் எடுத்துத் துணி நெய்வது உண்டாம். அதற்கு நார் மடி என்று பெயர். இதைக் கட்டிக் கொண்டுதான் நம்முடைய முன்னோர்கள் பூசை ஜெப தவங்களைச் செய்திருக்கிறார்கள். வாழைத்தண்டு- இதை வாரத்திற்கு ஒரு தடவையாவது சாப்பிட வேண்டும். சிறுநீர் சம்பந்தமான நோய்களுக்கு இது நல்ல மருந்து.

வாழை இலையில் சாப்பிடுவது உடம்புக்கு நல்லது மட்டுமல்ல ஒருமுறை பயன்படுத்தி விட்டு மறுமுறையும் இதைப் பயன்படுத்தாமல் இருப்பதால் சுத்தமானதும் சுகாதாரமானதுமான முறையாக வாழையிலையில் சாப்பிடுவது இருக்கிறது என்றும் சொல்லலாம். அதனால்தான் ஒருவர் இலையில் சாப்பிடுவதையே வழக்கமாக வைத்திருந்தார். ஒருநாள் அவர் வெளியூரில் நண்பர் வீட்டிற்குச் சென்றார். மதியச் சாப்பாட்டு நேரம் அது. நண்பருடைய மனைவி இருவருக்கும் முதலில் தட்டு வைத்தாள். அந்தத் தட்டைப் பார்த்ததும் இவர் முகம் கோணலாகி விட்டது. பலபேர் சாப்பிட்ட தட்டில் சாப்பிடுவதா என எண்ணி இலையில் தான் நான் சாப்பிடுவது வழக்கம் என்றார்.

அதற்கென்ன என்று அந்த அம்மா வீட்டுக்குள் போய் ஓர் இலையை எடுத்து வந்து போட்டார்கள். அந்த இலை கொஞ்சம் வாடி இருந்தது. பரவாயில்லை என்று சாப்பிட்டு முடித்து இலையை வெளியே போடச் சுருட்டி எடுத்தார். அந்த அம்மா இலையை அப்படியே வையுங்கள் என்றார்கள். நான் சாப்பிட்ட இலையை நானே எடுத்துப் போடுகிறேனே என்றார் இவர்.

ஐயோ நான் அதற்குச் சொல்லவில்லை. எங்களுடைய பக்கம் மறியல் போராட்டம் நடக்கிறதால் ஒருவாரமாக இலை வரத்தே இல்லை. இந்த இலையைத்தான் நான் கழுவிக் கழுவி ஆறு பேருக்குச் சாப்பாடு போட்டிருக்கிறேன் என்று சொன்னதும் அவருக்கு குமட்டத் தொடங்கிவிட்டது.

இப்படிப்பட்ட எதிர்விளைவுகளால் நமக்குக் கிடைக்க வேண்டிய பயன் கிடைக்காமலேயே போய்விடுகிறது.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கோயில்களுக்கு வருவது அவர்களது நாடகம்!



ராஜபக்ஷே திருப்பதிக்கு வந்தபோது...

இந்தியாவுக்கு வருகை தரும்போது எல்லாம் சிங்கள அரசுத் தலைவர்கள் தங்களை இந்து சமயத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் போல் காட்டிக் கொள்வதும் இந்துக்கள் பெரும் பான்மையாக வாழும் இந்திய மண்ணையும்அரசையும்வளை க்க நாடகமாடுவதும் இயல்பாகி விட்டது.

குறிப்பாக பி.ஜே.பி ஆட்சிக் காலத்தில் இந்த நாடகத்தை ஆடி, ஆட்சியாளர்களை அவர்கள் குளிர்விக்கிறார்கள். திருப்பதி கோயிலுக்குப் போவதும் ஏழு மலையானைக் கும்பிடுவதும் இந்த நாடகத்தில் வழமையான ஒரு காட்சியாய் அமைகிறது.

முன்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திருப்பதி வந்தார். இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன வருகிறார்.

இலங்கையில் சிங்கள இனம தோன்றுவதற்கு முன்பே "பஞ் சேஸ்வரங்கள்' எனப்படும் ஐந்து பழம்பெரும் சிவன் கோயில்கள் இருந்தன. ஆனால் இன்று இந்தச் சிவாலயங்களின் நிலை என்ன? சிங்கள இனவெறி அரசுகளும் புத்த சங்கங்களும் இந்தச் சிவாலயங்களை இன்று அழிவு நிலையிலேயே வைத்துள்ளன.

திருஞானசம்பந்தரின் பாடல் பெற்ற "திருக்கோணேஸ்வரம்' சிவன் கோயிலில் வானைத் தொடும் புத்தர் சிலை ஒன்றைச் சிங்கள புத்த வெறியர்கள் நிறுவியுள்ளனர்.

சுந்தரர் பாடல் பெற்ற "திருக் கேதீஸ்வரம்' சிவன் கோயில் காணியில், 2009இற்குப் பின் சிங்கள புத்த இனவெறியாளர்கள் 'புத்த விகாரை' ஒன்றைப் புதிதாக எழுப்பியுள்ளனர்.

கீரிமலை "நகுலேஸ்வரம்' சிவன் கோயில் சிங்களப் படையின இரும்புச் செருப்புகளின் கீழ் சிக்கிக் கிடக்கிறது.

சிலாபத்தில் அமைந்துள்ள 'முனீஸ்வரம்' சிவன் கோயில் 1901 இல் நடந்த மாகாணப் பிரிவினையின்போது சிங்கள ஸ்ரீலங்காவில் சிக்கிக் கொண்டது.

தென்னிலங்கையில் உள்ள "சந்திரமௌலீஸ்வரம்' (தொண்டீச்சரம்) சிவன் கோயில் அழிவுற்றுக் கிடக்கிறது.

சிங்கள புத்த இனவெறி அரசுகளின் துணைகொண்டே இந்தக் கோயில்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டன.

ஜெயவர்த்தன, பிரேமதாச, சந்திரிகா, மகிந்த ராஜபக்ச, மைத்திரபால சிறீசேன ஆகியோர் சிங்கள அரசுத் தலைவர்களாகவும் துணைத் தலைவர்களாகவும் இருந்த காலத்தில்தான் தமிழ் ஈழத்தில் 2,076 இந்துக் கோயில்கள் மீது வான்படை விண்ணூர்திகள் குண்டு வீசித் தாக்கியதைப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.



மைத்திரி பால சிறீசேன வந்தபோது...

இந்துக்களுக்கு எதிரான சிங்கள புத்த இன மதவெறி இலங்கையில் நீண்ட நெடுங்காலமாக இருந்து வருவதை இங்கே குறிப்பிட வேண்டும்.

100 ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் நிகழ்ந்த மத நல்லிணக்க மாநாட்டில் சிறப்புரை ஆற்றிவிட்டு சுவாமி விவேகானந்தர் தாயகம் திரும்பும் வழியில் இலங்கை செல்கிறார். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் அவர் அனுராதபுரத்தை அடைகிறார். அங்கே சிங்கள புத்த இனவெறியர்கள் கறுப்புக் கொடி ஏந்தி "இந்துச் சாமியே... திரும்பிப் போ! என்று அவரை விரட்டியடித்ததை வரலாறு பதிவு செய்து இருக்கிறது.

பாணந்துறை இந்துக் கோயிலில் சிங்கள புத்த இனவெறியர்கள் ஒரு தமிழ்க் குருக்களை எண்ணெய் ஊற்றி உயிரோடு எரித்ததையும், "இந்த நிகழ்ச்சி பற்றி அறிந்த போதுதான் எனக்கு ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றிற்று' என்று பிரபாகரன் பின்னாளில் அறிக்கை விட்டதையும் மறப்பதற்கு இல்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு "திருக் கோணேஸ்வரம்' சிவன் கோயில் ஐயர் சுட்டுக் கொல்லப்பட்டார். புங்குடுதீவு கண்ணகியம்மன் கோயில் குருக்களின் மனைவி சாரதாம்பாள் சிங்களப் படையால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி, இறந்து போனார்.

முள்ளிவாய்க்கால் போருக்குப் (2009) பின் தமிழ் ஈழத்தில் உள்ள இந்துக்கள் வாழும் சிற்றூர்கள் அனைத்திலும் அரச மரங்களை நடுவதும் புத்தர் சிலைகளை நிறுவுவதும் சிங்கள ஆட்சியாளர்களின் வாழ்த்தோடு புத்த சங்கங்களின் துணையோடு. சிங்களப் படைகளின் காவலோடு தொடர்ந்து நடைபெற்று வருவதாகத் தமிழ் ஈழத்திலிருந்து வரும் செய்திகள் உறுதிபடக் கூறுகின்றன.

இத்தனை "இந்து அழிப்பு' நடவடிக்கைகளையும் இலங்கையில் மேற்கொண்டு வரும் சிங்கள தலைவர்கள்தான், இந்தியா வரும் போது எல்லா இந்துக் கோயில்களையும் தேடித் தேடிக் கும்பிடுகிறார்கள்.

தமிழ் ஈழத்தில் சிவன் தலையிலும் அம்மன் தலையிலும் திருமால் தலையிலும் குண்டு போட்டவர்கள் திருப்பதி ஆண்டவனின் "தரிசனம்' பெற வருகிறார்கள். டெல்லியில் உள்ள பி.ஜே.பி ஆட்சியாளர்களுக்கு சிங்கள இன, மத வெறியர்களின் இந்தத் திருட்டு நாடகம் புரிந்தால் சரி.

**-ஜூனியர் விகடன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராணுவம்-கிளர்ச்சிப்படைக்கு இடையிலான

# கடும் மோதலில் 130பேர் மரணம்

### மியன்மாரில் தொடர்கிறது சோகம்

**மியன்மாரில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதலில் 130 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ள அதே வேளை கிளர்ச்சியாளர்களுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான உக்கிர சண்டையைத் தொடர்ந்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் சீனாவின் எல்லைப் பகுதிக்குஇடம்பெயர்ந்துள்ளனர்.**



நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற இந்த உக்கிர மோதல் மியன்மாரின் வடகிழக்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அந்தப் பகுதியில் அமைதி நிலையை ஏற்படுத்தும் வரை இராணுவம் தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி மியன்மாரில் இராணுவம் மீதான தாக்குதல்கள் கிளர்ச்சியாளர்களால் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

கோகங் பிராந்தியத்தின் சான் அரசின் கட்டுப்பாட்டுப் பகுதியிலே மேற்படி தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி தாக்குதல்கள் தொடர்பாக நடைபெற்ற முதலாவது பத்திரிகையாளர் மாநாட்டில் கடந்த 9 ஆம் திகதியிலிருந்து 61 இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கொல் லப்பட்டுள்ளனர் எனவும் 72 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவம் மேலும் அறிவித்துள்ளது. (இ-3-5)

## சோமாலியாவில் கார்க்குண்டு தாக்குதலில் எம்.பிக்கள் உட்பட 25 பேர் உயிரிழந்தனர்

சோமாலியா தலைநகர் மொகாடியாவில் ஜனாதிபதி மாளிகை அருகே ஒரு நட்சத்திர ஹோட்டல் உள்ளது. அங்கு குண்டுகள் நிரப்பிய காரை நிறுத்தி வைத்திருந்த தீவிரவாதிகள் அதை வெடிக்கச் செய்தனர்.

அதில் 10 பேர் உயிரி ழந்தனர். அதே நேரத்தில் ஹோட்டலுக்குள் உள்ள மசூதியில் தொழுகை முடிந்து மக்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

அப்போது, வெடிகுண்டுகள் நிரம்பிய காருடன் வந்த தீவிரவாதி குண்டை வெடிக்கச் செய்தான். அதில் பலர் காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் பலர் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதுவரை 2 கார்க்குண்டு தாக்குதல்களிலும் 25 பேர் பலியாகியுள்ளனர். அவர்களில் 2 பேர் எம்.பி.க்கள் மற்றும் பிரதமர் அலுவலக ஊழியர்களும் அடங்குவர்.

மேலும் 40 பேர் காயங்களுடன் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்த தாக்குதலில் அல்ஷபாப் தீவிரவாதிகள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் அல் கொய்தா அமைப்பின் கிளை நிறுவனமாகும்.

இதற்கிடையே, இத்தாக்குதல் தொடர்பாகஹோட்டல் ஊழியர்கள் 12 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். தீவிரவாதிகளின் இத்தாக்குதலுக்கு சோமாலியா ஜனாதிபதி ஹசன் ஷேச் முகமக் கண்டனம் தெரிவித்துள்ளார். (இ-5)

## தீவிரவாதத்தினை தடுக்க உதவுங்கள்

இணையம் வழியாக பரப்பப்படும் தீவிரவாத பிரசாரங்களை முறியடிக்க உதவ வேண்டும் என்று பேஸ்புக், கூகுள், டுவிட்டர் போன்ற நிறுவனங்களை பிரான்ஸ் கேட்டுக் கொண்டுள்ளது.

பிரான்ஸின் சான்பிரான்சிஸ்கோ மற்றும் சிலிக்கான் பள்ளத்தாக்கில் அந்நாட்டு உள்துறை அமைச்சர் பெர்னார்ட் கெஸீனுவேவுடன் சமூக வலைதள்ங்களின் பிரதிநிதிகள் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின்போது, இணையங்களின் வழியாக தீவிரவாதம் பரப்பப்படுவது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக பேஸ்புக், கூகுள், டுவிட்டர் உள்ளிட்ட நிறுவனங்கள் இணையத்தில் நுழைக்கப்படும் தீவிரவாத பிரசாரங்களைப் பற்றி தகவல் அளித்த தருணத்தில் நீக்கிட நிறுவனங்கள் உதவ வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அண்மைக்காலமாக தீவிரவாத நடவடிக்கைகளுக்கு இணையதளங்கள் வழியாக ஆள்சேர்ப்பு நடத்தப்படுவதாக சர்வதேச நாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதத்தில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடத்தப்பட்ட தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டதை அடுத்து பிரான்ஸில் தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




## தீவிரவாதிகளினது கருணை மனுக்கள் பாகிஸ்தான் ஜனாதிபதியால் தள்ளுபடி

பாகிஸ்தானில், 2008 ஆம் ஆண்டு முதல் மரண தண்டனை கைதிகளின் தண்டனையை நிறைவேற்ற தடை விதிக்கப்பட்டு, அந்த உத்தரவு தொடர்ந்து 6 ஆண்டுகளாக அமுலில் இருந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி, அங்கு பெஷாவர் இராணுவ பாடசாலையில் தலீபான் தீவி ரவாதிகள் அதி பயங்கர தாக்குதல்கள் நடத்தினார்கள். இந்த தாக்குதல்களில் 135 மாணவர்கள் உட்பட 148 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

அதைத்தொடர்ந்து தீவிரவாதிகளை ஒடுக்கும் விதத்தில், மரண தண்டனையை நிறைவேற்ற விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றுவது என்று பிரதமர் நவாஸ்ஷெரீப் முடிவு செய்தார்.

இந்த முடிவுக்கு டிசெம்பர் 17ஆம் திகதி ஜனாதிபதி மம் னூன் உசேன் ஒப்புதல் வழங்கினார். அதைத் தொடர்ந்து மரணதண்டனை விதிக்கப்பட்ட தீவிரவாதிகளின் தண்டனை நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பல்வேறு தீவிரவாத தாக்குதல்களில் குற்றவாளிகள் என தீர் மானிக்கப்பட்டு, மரண தண் டனை விதிக்கப்பட்ட தீவிர வாதிகள் அசார் என்ற பாய் கான், அப்துல் அஜீஸ், பஷீர் அகமது, முகமது பைசல், முக மது அப்சல், முனாவர் அலி ஆகிய 6 பேர் ஜனாதிபதியிடம் கருணை மனுக்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்களை பரிசீலனை செய்த ஜனாதிபதி மம்னூன் உசேன், அவற்றை தள்ளுபடி செய்து நேற்று முன்தினம் மாலை உத்தரவிட்டுள்ளதாக பாகிஸ்தான் இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ள தீவிரவாதிகள் 6 பேரும் சிந்து மாகாணத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். இவர்களது கருணை மனுக்கள், ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளது குறித்து, சிந்து மாகாண அரசின் உள்துறை அமைச்சகத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அந்த அமைச்சகம், 6 தீவிரவாதிகளை 2 நாட்களில் தூக்கில் போடுவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு சிறைத்துறை ஐ.ஜி.க்கு உத்தரவிட்டுள்ளது.

அதே நேரத்தில் பாதுகாப்பு காரணங்களை காட்டி, இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என தகவல்கள் கூறுகின்றன. தீவிரவாதிகளை ஒழித்து கட்டுவதற்கு அரசு நிர்வாகம் எடுக்கிற அனைத்து முடிவுகளுக்கும் தனது ஆதரவு உண்டு என்று ஏற்கனவே ஜனாதிபதி மம்னூன் உசேன் அறிவித்துள்ளார்.

மரண தண்டனை கைதிகளின் கருணை மனுக்களை ஏற்பதில்லை என்றும் அவர் முடிவு செய்திருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (இ-5)

## தீ விபத்தில் 10பேர் பலி

(டுபாய்)

ஐக்கிய அரபு நாடுகளின் தலைநகரான அபுதாபியில் அல்முசாபா பகுதி தொழிற்சாலைகள் மற்றும் வணிக வளாகங்கள் நிறைந்த பகுதி. இங்கு வெளிநாடுகளை சேர்ந்த இலட்சக்கணக்கானவர்கள் பணிபுரிகிறார்கள்.

குறிப்பாக இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளை சேர்ந்தவர்கள் இங்கு பெருமளவில் தங்கியுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இங்கு அங்குள்ள 2 அடுக்குமாடி வணிக வளாகத்தில் தீப்பிடித்தது.

தகவல் அறிந்ததும் தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்தனர். அதற்குள் தீ அங்கிருந்த 7 கடைகள் மற்றும் வீடுகளுக்கும் பரவியது. இந்த விபத்தில் ஒரு வீட்டில் தங்கி யிருந்த 10 பேர் உடல் கருகி பலியாகினர்.

8 பேர் காயம் அடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இந்த தீவிபத்தில் உயிரிழந்த அனைவரும் வெளிநாடுகளை சேர்ந்த தொழிலாளர்கள் என தெரிய வந்துள்ளது. ஆனால் எந்தெந்த நாடுகளை சேர்ந்தவர்கள் என அடையாளம் காண முடியவில்லை. சட்டத்துக்கு புறம்பாக வணிக வளாகத்தின் மேல் மாடியில் ஒரு அறையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

எனவே, கட்டட உரிமையாளரை பொலிஸார் கைது செய்தனர். மேலும் கட்டடத்தின் கண்காணிப்பாளர் உள்ளிட்டோரை தேடி வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

## ஆயுதம் தாங்கிய குழுவினரால் 89 சிறுவர்கள் கடத்தப்பட்டனர்

தென் சூடானிலுள்ள ஒரு பாடசாலையில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் திடீர் சுற்றி வளைப்பு நடத்தி சுமார் 89 பாடசாலை சிறுவர்களைக் கடத்திச் சென்றுள்ளதாக ஐ.நா சபை அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் வன்முறை காரணமாக ஆயிரக்கணக்கான அகதிகள் வெளியேறி வரும் மலக்கல் என்ற பகுதிக்கு அண்மையில் இக்கடத்தல் சம்பவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

கடத்தல் காரர்கள் குறித்த மக்கள் சமூகத்தை சுற்றி வளைத்து வீட்டுக்கு வீடு தேடுதல் நடத்தி 12 வயது மதிக்கத்தக்க பல சிறுவர்களை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளனர்.

இதன் மூலம் இவர்கள் சர்வதேச சட்டத்தை மீறியுள்ளதாக ஐ.நா. அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். அதாவது குடும்பங்களை அழித்து சிறுவர்களை கட்டா யத்தின் பேரில் ஆட்சேர்க்கும் நடவடிக்கையானது பாரிய மனித வுரிமை மீறல் குற்றமாகும் எனத் தென் சூடானுக்கான யுனிசெப் பிரதிநிதியான ஜொனாதன் வெயி ட்ச் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக தென் சூடான் சிறுவர்கள் தம்மால் புரிந்து கொள்ள முடியாத மட்டத்தைச் சேர்ந்த வன்முறைகளால் பாதிக்கப்படுவதும் அவர்கள் தமது குடும்பங்களை இழந்து பாடசாலைக்குச் செல்வதற்கான வாய்ப்பை இழப்பதும் ஒரு போதும் அனுமதிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

தென் சூடானில் ஜனாதிபதி சால்வா கீர் முன்னாள் பிரதி ஜனாதிபதியான ரியெக் மச்சரினை ஊழல் குற்றச்சாட்டின் கீழ் பதவி இறக்க முற்பட்ட போது டிசெம்பர் 2013 இல் அங்கு குழப்பம் வெடித்தது. இதனை அடுத்து இவர்கள் இருவருக்கும் விசுவாசமான போராளிகள் தமக்கிடையே மோதி வருகின்றனர்.

இதனால் அங்கு வன்முறைகள் விரைவில் பரவி அதிகளவான மக்கள் கொல்லப்பட்டும் தேசிய அளவில் பட்டினிச் சாவுகளும் அதிகரித்து வருகின்றது. சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. தென் சூடான் குழப்பத்தில் இதுவரை சுமார் 1.5 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக ஐ.நா தெரிவிக்கின்றது. இதில் சில மக்கள் அங்கு அமைந்துள்ள ஐ.நா பாசறைகளில் தஞ்சம் அடைவதால் குறித்த ஐ.நா பாசறைகளும் ஆயுதம் தாங்கிய போராளிகளின் இலக்காக ஆகி வருகின்றன.

பல தசாப்தங்களாக நீடித்த யுத்தத்தின் பின்னர் 2011 ஆம் ஆண்டு சூடானில் இருந்து தென் சூடான் பிரிந்தது. மேலும் உலகில் மிக அண்மையில் தோன்றிய நாடும் தென்சூடான் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தற்போது வன்முறைகளில் கிளர்ச்சித் தலைவர் மச்சருக்கு ஆதரவாக நுயெர் சமூகமும், ஜனாதிபதி சால்வா கீருக்கு ஆதரவாக டிங்கா பழங்குடிப் பிரிவினரும் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் கொல்லப்படும் பெருமளவு டொல்பின்!

புத்தளம் மாவட்டம் கற்பிட்டி கரையோரப் பிரதேசத்தில் உள்ள பல மீனவக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்குச் செல்லாமல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கற்பிட்டி கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடி முறைகளையும் தடைசெய்யப்பட்ட வலைகளையும் பயன்படுத்தி தொடரும் தொழில் நடவடிக்கைகளைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை பாலாவி பிரதான வீதியில் குறிஞ்சம்பிட்டி சந்தியில் வீதியை மறித்த மீனவர்கள் ஒன்றரை மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

டைனமைட் வெடி வைத்து மீன்கள் பிடிக்கப்படுவதால் பெருமளவிலான கடல் வளங்கள் தொடர்ந்து அப்பகுதியில் அழிந்துவருவதாக மீனவர்கள் கூறினர்.

குறிப்பாக, விற்பனைக்கான மீன்களை பிடிக்கும்போது, அகப்படும் பெருமளவிலான டொல்பின் மீன்கள் நாளாந்தம் கொல்லப்பட்டு கடலில் எறியப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் வெளியூர் மீனவர்களைத் தடுக்க முயன்றபோது, தாங்கள் தாக்கப்பட்டதாக கண்டக்குளி மீனவர்கள் கூறுகின்றனர்.

லைலா வலை, சுருக்குவலை போன்ற கடல் வளங்களை அழிக்கக்கூடிய வலைகளில் சிக்கி உயிரிழந்த சுமார் 100 டொல்பின் மீன்கள் கடந்த வாரத்தில் மட்டும் கடலில் எறியப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்துவோருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்குமாறு மீன்பிடித்துறை அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதன்படி, தடைசெய்யப்பட்ட வலைகளையும் டைனமைட் வெடி வைத்து மீன்பிடிப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மீன்பிடித் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. (இ-5)

# படகு கவிழ்ந்து விபத்து 100 பேர் மாயமாகினர்

(டாக்கா)

**பங்காள தேசத்தின் பத்மா ஆற்றில் நேற்றுக்காலை சுமார் 150 பயணிகளுடன் சென்ற படகு சரக்கு கப்பல்களை இழுத்து செல்லும் இழுவை படகு மோதி கவிழ்ந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட சிலர் பலியானதாக செய்திகள் வெளியாகியுள்ள அதேவேளை 100 பேர் மாயமானதாக தெரிவிக்கப்படுகிறது**

தலைநகர் டாக்காவில் இருந்து சுமார் 80 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மாணிக்கஞ்ச் மாவட்டம் தவ்லத்டியா-பட்டுரியா பகுதியின் அருகே வந்த போது எதிரே வந்த சரக்கு படகு மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்ததாக முதலகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட சிலர் பலியானதாகவும், சுமார் 50 பேர் உள்ளூர் மக்கள் உதவியுடன் நீந்திவந்து கரை சேர்ந்ததாகவும், நீரில் மூழ்கிய சுமார் 100 பேரை மீட்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக வும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-5)

# டன்பார் தோட்ட லயன் குடியிருப்பில் தீ விபத்து

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன், டன்பார் தோட்ட லயன் குடியிருப்பில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் 4 வீடுகள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன.

மேற்படி விபத்தில் வீட்டிலிருநத பொருட்கள் அனைத்தும் எரிந்து சேதமடைதுள்ளதாகவும் இதன் காரணமாக வீட்டிலிருந்த எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என்றும் ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த 4 வீடுகளிலும் குடியிருந்த 21 பேர் தற்போது தோட்ட உத்தியோகத்தர் ஒருவரின் வீட் டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மின்சார கோளாறு காரணமாகவே இத்தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு மாகாண அமைச்சர் ராம் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார். இந்த தீ விபத்து தொடர்புடைய மேலதிக விசாரணைகளை ஹற்றன்பொலிஸார் மேற கொண்டு வருகின்றனர். (இ-5)

# ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களே மகிந்தவுக்காக குரல் கொடுக்கின்றனர்

**பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு**

(கொழும்பு)

ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட தரப்பினர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் வேட்பாளராக தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயமாக தோல்வியைத் தழுவுவார்.

கடந்த தேர்தலில் மகிந்தவிற்கு வாக்களித்தவர்கள் உண்மைகளை அறியாமல் வாக்களித்திருந்தனர்.

தற்போது உண்மையான நிலைமை மக்களுக்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மகிந்தவை பார்க்கப் போகின்றவர்கள் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையவர்கள்.

சில அமைச்சர்கள் தங்களுக்கு கிடைத்தவற்றைக் கொண்டு திருப்தியடைவதில்லை என்பது உண்மைதான்.

எனினும், அரசாங்கம் அளித்த நூறு நாட்கள் திட்ட வாக்குறுதிகள் உரிய முறையில் நிறைவேற்றப்படும்.

சில வேளைகளில் குறித்த நாட்களில் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாவிட்டாலும், நூறு நாட்களுக்குள் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என பாலித ரங்கே பண்டார சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்துள்ளார். (இ-5)

# தற்கொலைப்படை தாக்குதலில் லிபியாவில் 42பேர் உயிரிழப்பு!

(கெய்ரோ)

லிபியாவில் கடந்த 4 ஆண்டுகளுக்குமுன்பு கடாபியின் ஆட்சி முடிவற்ற நிலையில் அங்கு அரசியல் குழப்பநிலை நீடித்து வருகிறது.

இதனால் அங்கு 2 அரசுகள் இயங்கி வருகின்றன.

இதற்கிடையே ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் அடிக்கடி வெடிகுண்டு தாக்குதல்களிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்தநிலையில் லிபியாவின் கிழக்கு பகுதியில் உள்ள குப்பா நகரில் நேற்று முன்தினம் தற்கொலைப்படை தீவிரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்தினர்.

3 இடங்களில் கார் குண்டுகள் வெடித்ததில் 42 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 70 பேர் படுகாயம் அடைந்தனர்.

அவர்களுக்கு வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு பொறுப்பு ஏற்பதாக ஐ.எஸ்.ஐ.எஸ் ஆதரவு தீவிரவாதிகள் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டு உள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் மீது எகிப்து இராணுவம் தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இந்த தாக்குதலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய - விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 60 | 100 |
| உருளைக்கிழங்கு | 90 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 140 |
| தக்காளி | 150 | 110 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 180 | 100 | 240 |
| பூசணி | 100 | 60 | 120 |
| புடோல் | 120 | 50 | 100 |
| வாழைக்காய் | 100 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 100 | 110 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 150 | 140 | 160 |
| லீக்ஸ் | 200 | 120 | 240 |
| பீற்றூட் | 80 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | 400 | — | 300 |
| போஞ்சி | 180 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | — |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 50-60 |
| இராசவள்ளி | 120 | 100 | [illegible] |
| வெங்காயப்பூ | 180 | — | 160 |

# பிரிவுத்துயர் பகிர்வு



## திருமதி ஜோசப் மரிஸ்ரெலா


காவலூரை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோசப் மரிஸ்ரெலா கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடலுக்கு நாளை செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் St.Paul தேவாலயத்தில் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் Tours Nord சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



## குணரட்ணம் பற்குணராஜா

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவி நிலை அலுவலகர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குணரட்ணம் பற்குணராஜா கடந்த 18 ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார். ஈமைக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



## கார்த்திகேசு பிள்ளையினார்

கோயில் புளியங்குளம் நெடுங்கேணியை பிறப்பிடமாகவும் 1 ஆம் வட்டாரம் முள்ளிய வளையை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு பிள்ளையினார் கடந்த 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மு.ப 10 மணியளவில் இடம்பெற்று பின்னர் பூத வுடல் நாவற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



## சுப்பிரமணியம் சகாதேவன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சகாதேவன் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணிக்கு Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## கதிர்காமநாதன் ஐயா விஜயச்சந்திரன் ஐயா

சுழிபுரம் பறாளாயைப் பிறப்பிடமாகவும்,நெதர்லாந்து Den Helder ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமநாதன் ஐயா விஜயச்சந்திரன் ஐயா கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப 5 மணியளவில் Yarden Crematorium Schagekogge, Haringhuizerewg 3, Schagen, Netherlands என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை அரசாங்கத்தின் நன்மதிப்பை மேம்படுத்தும் பிரசாரங்கள் இரத்து

(கொழும்பு)


இலங்கையின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பிரசாரங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

சர்வதேச அரங்கில் நாட்டின் நன்மதிப்பை மேம்படுத்தும் நோக்கில் கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பாரியளவில் பணத்தை செலவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக அமெரிக்காவுடன் சுமுகமான உறவுகளைப் பேணவும், சர்வதேச அரங்கில் இலங்கை தொடர்பில் நன்மதிப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் இவ்வாறு பல மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டு வந்தது.

வெளிநாட்டு பிரசார நிறுவனங்களிடம் இந்தப் பணி ஒபபடைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பாரிய பொருட் செலவில் வெளிநாட்டு நிறுவனங்களிடம் பிரசாரம் செய்யும் நடவடிக்கைகளை முற்று முழுதாக நிறுத்தப்படுவதாக புதிய அரசாங்கம அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)



# இராஜதந்திர கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி நாட்டுக்குள் ஹெரோயின் கடத்தப்பட்டுள்ளது!

## அஜித் பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை பயன்படு த்தி நாட்டுக்குள் ஹெரோயின் போதைப் பொருள கடத்தப்பட்டுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டமைப்பின் ஆட்சிக் காலத்தில் இந்த இராஜதந்திர கடவுச் சீட்டுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.**



இந்தக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி விமான நிலையத்தின் முக்கிய பிரபுக்கள் பகுதியின் ஊடாக பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் செல்வாக்கின் ஊடாக இராஜதந்திர கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொண்டு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இராஜதந்திர கடவுச்சீட்டை வைத்திருக்கத் தகுதியற்றவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தினால் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பிலான தகவல்களை அம்பலப்படுத்திக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்னவின் அலுவலகத்தின் ஊடாக பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸார் உரிய விசாரணை நடத்தவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் இராஜதந்திர கடவுச்சீட்டு பயன்பாடு வரையறுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போதைப் பொருள கடத்தல் தொடர்பில் முன்னாள் பிரதமரிடம் விசாரணை நடத்தப் படவில்லை என்பதனை ஒப்புக் கொள்வதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## பாதாள உலகக் குற்றவாளிகள் ஊடுருவத் தொடங்கியுள்ளனர்

புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த சில பாரிய குற்றவாளிகள் நாட்டுக்குள் ஊடுருவத் தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலனாய்வுப் பிரிவினர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளனர்

சில பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் தற்போது மீளவும் நாட்டுக்குள் ஊடுருவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளை வான்களில் பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் கடத்தி கொலை செய்யப்பட்ட காலத்தில் இவர்கள் தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நாட்டுக்குள் ஊடுருவியுள்ள குற்றவாளிகள் பிரபல அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு அருகாமையில் சுற்றித் திரிவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

டுபாய், இத்தாலி, பிரான்ஸ் போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து வந்த பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

லண்டனில் வாழ்ந்து வரும் குடு லால் போன்றவர்களும் நாடு திரும்ப உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## சிறுமி மீது துஷ்பிரயோகம் 80 வயது முதியவர் கைது!

லுணுகலைப் பகுதியில் உள்ள தோட்டமொன்றில் 80 வயதுடைய முதியவரொருவர் 12 வயது சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரை பொலிஸார் பதுளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ· 5)

## அரசாங்கத்திற்கு எதிராக ஜே.வி.பி.கட்சி போராட்டம்

### விஜித ஹேரத் அறிவிப்பு

(கொழும்பு)

ஊழல், மோசடியாளர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்காததை கண்டித்து நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்த ஜே.வி. பி தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 3 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் முதலாவது ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என ஜே.வி. பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



புலிகளின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான கே.பி என்ற குமரன் பத்மநாதன், ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள், போதைப் பொருள் வியாபாரிகள் உட்பட பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அடிப்படைகள் இருந்தாலும் தற்போதைய அரசாங்கம் அதற்கான உரிய தலையீடுகளை மேற்கொள்வதில்லை என ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதனால், இந்த நிலைமை குறித்து மக்களுக்கு தொடர்ந்தும் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பி.ப 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் ப.சுதானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் தர்ம லிங்கம் சித்தார்த்தன், ஓய்வு நிலை ஆசிரியர் அ.பிரதாபன், ஆசிரிய ஆலோசகர் நா.சிறி கணேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## கலிங்கம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்தின் முதல் காலாண்டுக்கான கலிங்கம் பல்சுவை இதழ் வெளிவந்துள்ளது.

தாய் மண் மீது அடங்காப் பற்றுக் கொண்ட மாவீரன் பண்டார வன்னியனின் வன்னியுத்தம் மற்றும் பல்வேறு சுவையான அம்சங்களுடன் கலிங்கம் பல்சுவை இதழ் வெளிவந்துள்ளது. (இ-3)

## பொதுமக்களுக்கு ஏதாவது சலுகைசெய்யப்பட வேண்டும்

### சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் ஒழுங்காக ஆதனவரிசெலுத்தும் பொதுமக்களுக்கு ஏதாவது சலுகை செய்யப்படவேண்டும் என எதிர்க் கட்சி உறுப்பினர் ந.திருக்குமரன் சபையின் மாதாந்தக் கூட்டத்தில் முன்மொழிந்த தீர்மானத்தை ஆளும் கட்சி உறுப்பினர் ஞா.கிசோா வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் சபை மண்டபத்தில் சபையின் மாதாந்தக் கூட்டம் நடை பெற்றபோதே இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இச் சலுகை நூலகத்திற்கான இலவசஅங்கத்துவமாகவோ அல்லது துவிச்சக்கரவண்டிக்கான இலவச இலக்கத்தகடாகவோ இருக்கலாமென உறுப்பினர் தெரிவித்தார்.

இவ்விடயமானது சபையிலே பரிசீலிக்கப்பட்டபோது இளம் சமுதாயத்தினரின் வாசிப்பை ஊக்குவிக்கும் நோக்குடன் இது அமைவதால் ஒழுங்குமுறையாக ஆதன வரி செலுத்தும் குடும்பத்தில் ஒருவருக்கு இலவச நூலக அங்கத்துவம் வழுங்கப்படலாம் எனத் தவிசாளர் தெரிவித்தார்.

அவ் அபிப்பிராயத்தினை சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. அத்துடன் இது பற்றிய அறிவித்தலை சம்பத்தப்பட்ட பகுதிகளுக்கு அறிவிக்குமாறும் பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

அடுத்து நகரசபை எல்லைக் குட்பட்ட வியாபார நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தப் படவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அதற்கான வேண்டுகோள் விடுக்கப்படவேண்டும் என ஆளும்கட்சி உறுப்பினர் அ.பாலமயூரனால் முன்மொழியப்பட்ட தீர்மானம் சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.(இ-3-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி எம்மாணவர்களின் கைகளில்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்

எண்ணிலடங்காத இழப்புக்களால் முடங்கிக் கிடக்கிற எமது சமூகத்தின் வளர்ச்சி என்பது மாணவர்களாகிய உங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டுக்கான தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் நான்கரை இலட்சம் ரூபாவை ஒதுக்கி முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு பாடசாலைகளுக்கும் மன்னார் மாவட்டத்தில் ஒரு பாடசாலைக்கும் என மொத்தம் மூன்று பாடசாலைகளுக்குமான இசைக்கருவிகளை அவர் அண்மையில் வழங்கியுள்ளார். இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில்.

தமிழர் பண்பாடுகளை நிலைநிறுத்தி தாயகத்தில் தமிழர் தேசிய வாழ்வைக் காக்கும் எண்ணத்தோடு தான் இச்செயற்றிட்டத்தை முன்னெடுக்கின்றேன். அத்தோடு இச்செயற்றிட்டம் இவ்வாண்டு ஏனைய பாடசாலைகளை நோக்கி இது விரிவுபடுத்தப்படும்.

எண்ணிலடங்காத இழப்புக்களால் முடங்கிக்கிடக்கிற எமது சமூகத்தின் வளர்ச்சி என்பது மாணவர்களாகிய உங்களின் கைகளிலேயே உள்ளது. கல்வியாலும் விளையாட்டு உள்ளிட்ட அனைத்து பன்முக ளங்களிலும் உங்கள் ஆற்றல்களை விருத்தி செய்து நாளை இச்சமூகத்தை ஆள்கிற துறைசார் வல்லுநர்களாக நீங்கள் மிளிர வேண்டும். அதேவேளை பழைமையும் தொன்மையும் மிக்க எங்களின் பாரம்பரியத்தையும் தனித்துவத்தையும் காக்கிற கடப்பாடும் உங்களை சார்ந்துள்ளது.

தாயகத்தில் உள்ள பாடசாலைகளில் தமிழர் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் நோக்கோடு இந்த இன்னிய இசைக்கருவிகளை வழங்குகிறேன். இதை உரிய வகையில் பழகி .வரவேற்பு நிகழ்வுகளில் தொடர்ச்சியாக பயன்படுத்தி எங்கள் பாரம்பரிய அடையாளங்களை, மேன்மையான தனித்துவத்தை நீங்கள் கட்டிக்காக்க வேண்டும். வருகின்ற தலைமுறைகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

வடக்கும் கிழக்கும் எங்கள் சொந்த மண்ணே. பிரதேச . மாவட்ட எல்லைகளை கடந்து தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து பகுதிகளையும் சமமாக எண்ணி நாம் ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்றார். (அ-2)

# கமக்கார அமைப்பின் நிர்வாகிகள் தெரிவு

(மல்லாவி)

ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 19ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு ந.பூலோகராசா தலைமையில் மாங்குளம் பழைய கொலனி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.குணாளன், மாங்குளம் கிராமசேவகர் கே.சண்முகராசா ஆகியோர் கலந்து கொண்டு தெரிவுகளை மேற்கொண்டனர்.

இதில் தலைவராக ச.கஜன், உப தலைவராக சி.சிந்துஜன், செயலாளராக கி.சித்திரரூபன், உப செயலாளராக பா.ரமேஷ், பொருளாளராக செ.லவகாந் ஆகியோர் தெரிவாகினர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக ம.பூலோகராசா, ச.சிவானந்தம், அ.தனராஜ்,அ.பெரியசாமி ஆகியோர் தெரிவாகினர். (அ-2-15)

# அலரி மாளிகையையே அபிவிருத்தி செய்துள்ளனர்

## பிரதி அமைச்சர் ம.விஜயகலா தெரிவிப்பு

எங்களை எங்கள் மண்ணில் இருந்து அகற்ற எங்கள் மக்கள் சிலரே கைக்கூலியாக இருந்தார்கள் என மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா பண்டாரிகுளம் விபுலாநந்தாக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இந்த பாடசாலையில் பௌதீக வளங்கள் போதியளவில் இல்லை. ஆனால் ஆசியாவின் ஆச்சரிய மிக்க நாடாக இலங்கையை அபிவிருத்தி செய்வதாக கூறியவர்கள் அலரிமாளிகையையே அபிவிருத்தி செய்துள்ளனர்.

எங்களுடைய பணத்தையே அவர்கள் சூறையாடி சென்று வைத்திருந்தார்கள். போர் முடியும் காலத்தில் எங்கள் மக்களுடைய பணத்தையும் நகைகளையும் கொள்கலன்களில் சூறையாடினார்கள்.

ஆனால் எங்களுடைய சிறார்களுக்கு படிப்பதற்கு கூட கட்டடம் கிடையாது.

இவற்றுக்கெல்லாம் யார் உடந்தையாக இருந்தார்கள், எங்களை எங்கள் மண்ணில் இருந்து அகற்றுவதற்கு. எங்களுடைய மக்கள் சிலரே அரசாங்கத்துடன் கைக்கூலிகளாக இருந்து வந்தார்கள்.

இன்று இந்த கைக்கூலிகளை முற்றாக ஒழிப்பதற்கு நாங்கள் முன்வருகின்றோம். இவர்களால்தான் நாம் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இவர்களின் வழிகாட்டலில் தான் தெற்கில் இருந்து அரசாங்கம் வந்து எம்மை தாக்கியது. ஆகவே, இந்த சொற்ப ஆசைக்காக துணை போகாது எமக்காக செயற்படவேண்டும் என்று தெரிவித்தார். (அ-2)

# நாயுடன் மோதியதில் ஒருவருக்குக் காயம்

வீதிக்கு குறுக்காகப் பாய்ந்த நாயுடன் மோதுண்டு குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கிளிநொச்சி கனகபுரம் 10 ஆம் பண்ணையடியில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இதில் உதயநகர் மேற்கு கிளிநொச்சியில் வசிக்கும் பன்னீர் செல்வம் கஜேந்திரன் (வயது-25) என்பவரே படுகாயம் அடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது, அக்கராயனில் இருந்து வீடு நோக்கி பயணித்துக் கொண்டிரு ந்த வேளையில் குறித்த பகுதியில் வைத்து நாய் ஒன்று குறுக்காக பாய்ந்ததில் அதில் மோதுண்டு படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-2-259)







மன்னார் பெண்கள் புனித சவேரியார் தேசிய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றபோது...

## புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

# கணவனை இழந்த நிலையில் 1451 குடும்பங்கள் உள்ளன

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாகவும் மற்றும் ஏனைய வழிகளாலும் குடும்பத் தலைவரை இழந்த ஆயிரத்து 451 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் குடும்ப பிணக்குகள் காரணமாக கணவனை பிரிந்த 312 பெண் தலைமைத்துவ குடும்பங்களும் உட்பட மனைவியை இழந்த நிலையில் 822 தபுதாரர்களும் வாழ்வாதாரத்திற்குரிய தொழில் வாய்ப்பின்றி வாழ்வதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள 19 கிராம சேவையாளர் பிரிவில் வாழும் 12 ஆயிரத்து 94 குடும்பங்களில் மேற்படி குடும்பங்கள் உள்ளடங்குகின்றன.

இவர்களில் 20 தொடக்கம் 40 வயதிற்கு இடைப்பட்ட 289 பெண்களும் 41 தொடக்கம் 60 வயதிற்கு இடைப்பட்ட 319 [illegible] 60 வயதிற்கு மேற்பட்ட 843 பெண்களுமாக மொத்தம் ஆயிரத்து 451 பெண் தலைமைத்துவ குடும்பங்களுடன் கணவனை பிரிந்த நிலையில் 312 குடும்பங்களும் குடும்பச் சுமையால் அல்லற்படுகின்றன.

எனவே இவ்வாறு அல்லற்படும் மேற்படி குடும்பங்களுக்கு புலம் பெயர் உறவுகள் வாழ்வாதார தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி கொடுக்க முன்வர வேண்டுமென பாதிக்கப்பட்ட மேற்படி குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (அ-2-15)

# 6 மாத காலத்தை கொண்ட இலவச பயிற்சி நெறிகள்

ஏ-9 வீதி மாங்குளத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் தொழிற்பயிற்சி நிலையத்தில் இணைய வடிவமைப்பு, மின்னியலாளர், குழாய் பொருத்துநர், கைப்பணி பொருள் உற்பத்தி, சிறுவர் பெண்களுக்கான ஆடைவடிவமைப்பு ஆகிய 5 பயிற்சி நெறிகள் இலவசமாக ஆறு மாதத்திற்கு நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதிஎஸ்மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இப் பயிற்சி நெறிகளில் 18 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ள முடியும்.

இப்பயிற்சி நெறிகள் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் ஒரு பிரிவினருக்கும் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய தொழில்துறை சார்ந்தவர்களுக்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரையும் இலவசமாக நடைபெறும்.

இப் பயிற்சி நெறிகளுக்கு ஏனைய பிரதேசங்களில் இருந்தும் பயிற்சியாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இது தொடர்பில் மேலதிக விபரம் தேவைப்படுவோர் துணுக்காய் வலயக் கல்வி திணைக்கள உதவிக்கல்விப்பணியாளர் (முறைசாராக் கல்வி) க.சக்திதரனுடன் 021-2060055 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் அற்பமானது என்று கருதினால் நீயே அற்பமாகி விடுவாய்.
- யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துரியோதனனின் தொடையில் உயிர்; காட்டிக் கொடுக்க கண்ணன் தேவை

வீமன் மகாவீரன். கதாயுதம் கொண்டு தாக்குவதில் அவனுக்கு நிகர் எவரும் இல்லை. எனினும் குருசேத்திரத்தில் துரியோதனனை வெல்ல அவனால் முடியவில்லை. கதாயுத தாக்குதலில் மகா விண்ணனாகிய வீமன் துரியோதனனை வெல்ல முடியாமைக்கு என்ன காரணம் என்றறிதல் அவசியம்.

வீமன், கதாயுதத்தாக்குதலில் வல்லவனாயினும் அவனிடம் போர்த்தந்திரம் இருக்கவில்லை. எந்த இடத்தில் அடி கொடுத்தால் துரியோதனன் நிலத்தில் வீழ்வான் என்பது தெரியாமல் கதாயுதத்தால் தாக்குவதில் எந்தப் பலனும் இருக்காது. இங்குதான் கண்ணன் வீமனுக்கு உதவுகின்றான்.

துரியோதனனின் தொடையில் அடி கொடுக்குமாறு கண்ண பரமாத்மா குறிப்பால் உணர்த்த; வீமன் இலக்குத் தப்பாமல் தாக்க; கௌரவர் தலைவன் துரியோதனன் நிலத்திடை வீழ்ந்து மாண்டு போகிறான்.

துரியோதனனைக் கொல்வேன் என்று சபதம் எடுத்த வீமனுக்கு கண்ணன் உதவி புரியாவிட்டால் சபதம் நிறைவேறி இருக்கமாட்டாது. சிலவேளையில் துரியோதனன் வெற்றி பெறுவதற்கும் சந்தர்ப்பம் இருந்திருக்கலாம்.

எனவே போரிடல் வேறு; தாக்குதல் திறன் வேறு; இலக்கு வேறு என்பதை போர்க்களத்தில் நிற்பவர்கள் புரிதல் வேண்டும். தனித்து போர்க்களத்தில் மட்டுமல்ல, அரசியல் களத்தில் நிற்பவர்களும் இதைப் புரிந்து கொள்வது அவசியம்.

எனினும் நம் தமிழ் அரசியல் தலைமைகள் தனித்து நின்று அரசியல் செய்கின்றன. தமிழர்களுக்கு ஏற்பட்ட தோல்விகளுக்கு இதுவே காரணம் எனலாம்.

எப்போதும் அரசியல்வாதிகள் தமக்குப் பின்னணியில் இராஜதந்திரத்தில் நிபுணத்துவம் உடையவர்களை தம்முடன் வைத்திருக்க வேண்டும். அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே அரசியல் செய்ய வேண்டும். ஆனால் எல்லாம் எங்களுக்குத் தெரியும். மற்றையவர்கள் எவரும் எமக்கு இராஜதந்திரம் சொல்லித் தரவேண்டியதில்லை என்ற நினைப்பு தமிழ் இனத்தின் எதிர்காலத்தை அதல பாதாளத்தில் வீழ்த்தி விடும்.

கண்ணனின் உதவி இல்லாமல் துரியோதனனை தன்னால் வெல்ல முடியும் என்று வீமன் நினைத்திருந்தால், பாண்டவர்கள் நடத்திய போராட்டமும் பதினேழு நாட்களாக அவர்கள் பெற்ற வெற்றியும் வீணாகிப் போயிருக்கும்.

ஆக, நிபுணத்துவம் உடையவர்களின் ஆலோசனையைப் பெறுவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் பின்நிற்கலாகாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்கைப் பார்க்கும் போது ஒவ்வொரு உறுப்பினர்களும் சுயமாகச் செயற்படுவது போலத் தெரிகிறது. போர்க்குற்ற விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கின்ற விடயம் பிற்போடப்பட்டது தொடர்பில் நேற்று முன்தினம் 21-ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஒரு பெரும் எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்தில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொண்டார். அதேநேரம் அதே ஆர்ப்பாட்டத்தில் வைத்து கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் உருவப் பொம்மை எரியூட்டப்பட்டது.

அப்படியானால் கூட்டமைப்புக்குள் என்ன நடக்கின்றது என்ற கேள்வி எழுவது நியாயமானதே.

இந்தக் கேள்விக்கு பதில், கூட்டமைப்புக்குள் இப்போது தேர்தல் சூறாவளி வீசத்தொடங்கி விட்டது. அந்தச் சூறாவளி காரணமாக கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு திசைகளில் செல்வதைக் காணமுடிகின்றது.

இதன் ஒரு வடிவம்தான் சுரேஸ் பிரேமச்சந்திரன் கலந்து கொண்ட போராட்டத்தில் சுமந்திரனின் உருவப் பொம்மை எரியூட்டப்பட்ட சம்பவமாகும்.

எனவே இத்தகைய முரண்பாடுகளை நீக்க, வீமனுக்கு கண்ணன் போல தமிழ் அரசியல் தலைமைகளுக்கு இராஜதந்திர ஆலோசனை வழங்கும் நிபுணத்துவக்குழு தேவை.

இத்தகையதொரு குழு இருக்குமாயின் அதன் வழிப்படுத்தலில் கூட்டமைப்பு ஒரே பாதையில் பயணிக்க முடியும். இப் பயணிப்பு வெற்றி தரும்.

## தனித்துப் போட்டியிடும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி?

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வலுவான தனிக்கட்சியாக பொதுத் தேர்தலில் போட்டியிடுவது மற்றும் அதன் பின்னர் நிலையான தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொதுத் தேர்தலில் பிரதமர் வேட்பாளரை தெரிவு செய்தல் மற்றும் அது சம்பந்தமாக கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளை தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சி பாசறை இதில் ஒரு முக்கிய நடவடிக்கையாகும்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் இந்த பயிற்சி பாசறை இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் மாத்திரமின்றி குறிப்பாக வர்த்தக சமூகங்களுக்கு மத்தியில் நிலையான தேசிய அரசாங்கம் தொடர்பாக ஏற்பட்டுள்ள எதிர்பார்ப்பு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் விசேட கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தி, நிலையான நாட்டை கட்டியெழுப்புவதற்காக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல க்ட்சிகளின் பங்களிப்புடன் பொதுத் தேர்தலுக்கு பின்னர் ஸ்திரமான தேசிய அரசாங்கம் அமைக்கப்படும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தெரிவித்திருந்தனர். (எ-1)

## இரட்டைக் குடியுரிமையை மீளாய்வு செய்யத்திட்டம்

(கொழும்பு)

கடந்த அரசாங்கம் வழங்கிய இரட்டைக்குடியுரிமை குறித்து மீளாய்வு செய்யப்பட உள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தினால் 2000த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இரட்டைக் குடியுரிமை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட உள்ளது.

கடந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட இரட்டைக் குடியுரிமை முறைமை குறித்து மீளாய்வு செய்ய விசேட குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். 2010-ம் ஆண்டு முதல் இரட்டைக்குடியுரிமை வழங்கும் நடைமுறை ரத்து செய்யப்பட்டிருந்தது.

எனினும், உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் சிலருக்கு மட்டும் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டு வந்த தாகத் தெரிவிக்கப்படுகிறது. சிலருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க உயர் அதிகாரிகள் லஞ்சம் பெற்றுக்கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதிகளவில் முஸ்லிம் மற்றும் தமிழ் குடும்பங்களுக்கு இவ்வாறு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதவர்களின் இரட்டை குடியுரிமை தொடர்பில் மீளாய்வு செய்யப்படும் என அமைச்சர் அறிவித்துள்ளார். இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ-1)

## மீனவர் பேச்சை பிற்போட முயற்சி

(கொழும்பு)

இலங்கை மற்றும் இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தைகளை பிற்போடுமாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கை மீன்பிடித்துறை ராஜாங்க அமைச்சர் டிலிப் வெதஆராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 5-ம் திகதி சென்னையில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்படவிருந்தது.

தமிழக மீனவர்களின் இழுவை படகுகளே இலங்கை மீனவர்களுக்கு பிரச்சினையாக காணப்படுகிறது.

இந்த நிலையில் இது குறித்து இந்திய அரசாங்கம் முன்வைத்த மாற்றுத் திட்டம் குறித்து இன்னும் ஆராயப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த பேச்சுவார்த்தைய பிற்போடுவதற்கு கோரப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். (எ)

## கர்ப்பிணிகளுக்கு பரசிடமோல் ஆபத்து

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்கள் பரசிடமோல் பயன்படுத்துவதால் பிறக்கும் குழந்தைகளுக்கு பக்கவிளைவுகள் ஏற்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை நோர்வே நாட்டை சேர்ந்த ஒஸ்லோ பல்கலைகழகத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 48 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்களை உள்வாங்கி மூன்று வருட காலத்திற்கு ஆய்வு நடத்தப்பட்டுள்ளதாக, கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் ரத்னசிறி ஏ ஹெவாகே தெரிவித்தார்.

வைத்தியர்களின் சிபாரிசு இன்றி கர்ப்பிணிகள் பரசிடமோல் பெற்றுக் கொள்வதை முற்றிலும் தவிர்க்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி பொலிஸாரால் கைது!

(மாலே)

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீத், பயங்கரவாத குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கரவாத குற்றங்களுக்காக அந்நாட்டு குற்றவியல் நீதிமன்றத்தினால் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீருக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பித்திருந்தது.

அந்த பிடிவிறாந்தில், மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியிடம் விசாரணைகள் நடத்தாமல் அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்வதற்கு இடமளிக்க வேண்டாம் என்று பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இவர் தூனிதூ தீவில் அமைந்துள்ள சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கைது செய்யப்பட்ட போது, அவருடைய வீட்டுக்கு முன்னால் அவருடைய ஆதரவாளர்கள் குவிந்ததாகவும், அவர்கள் அனைவரும் பொலிஸாருக்கு எதிராக தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


மேலும் அவருடைய ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றிலும் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவர், மாலைதீவின் தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-1)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வேண்டல் வளம்



ஒவ்வொருவருடைய தேவையையும், விருப்பத்தையும் உணர்ந்து, எந்த இடத்தில் குறை இருக்கிறது , எந்த இடத்தில் நிறை இருக்கிறது என்பதையும் தெரிந்து கொண்டு உதவி செய்வது, வாழ்வது தான் அன்பும் கருணையும். இதைத்தமிழில் வேண்டல் வளம் என்று சொல்வார்கள். வளம் என்றால் நம்மிடத்தில் இயற்கையாக உள்ள இருப்பு என்பதாகும். வேண்டல் என்றால் அவ்வப்பொழுது ஏற்படக் கூடிய தேவை என்ன என்பதாகும். இதே போன்று பிறரின் வேண்டல் வளம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த வளத்தைப் பயன்படுத்தவும் வேண்டலை பூர்த்தி செய்யவும் உதவ வேண்டும் என்பது தான் வேண்டல் வளம் தெரிந்து விளைவறிந்து வாழ்தல் என்பதாகும்.

இப்பொழுது அந்த வார்த்தை வழக்கில் வண்டவாளம் என்றாகிவிட்டது. நம்மைச் சுற்றி உள்ளவர்களுக்கும், நம்மோடு இணைந்து உள்ளவர்களுக்கும், வேண்டல் வளம் தெரிந்து விட்டால், நான் எந்த அளவில் என்னுடைய வேண்டல் வளம் இந்த இரண்டையும் வைத்துக்கொண்டு அவர்களின் மூலமாக என்ன பெற முடியும், அவர்களுக்கு என்ன செய்ய முடியும்என்பதை அறிந்தால், உயிர்களிடத்து அன்பும் கருணையுமாக இருக்கக் கற்றுக்கொள்ளலாம். இந்த முறையில் ஒவ்வொருவரும் அன்பையும், கருணையையும் எழுச்சி பெறச் செய்து அதன் வழியே வாழ முற்படும்பொழுது எல்லா உயிர்களோடும் ஓர் இனிமை ஏற்படும் அல்லவா? அந்த இனிமை தான் வாழ்வில் முழுமை தரும், அறிவை உயர்த்தி வைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ICC CRICKET WORLD CUP 2015

# மஹேல சதம்

# இலங்கைச் சிங்கங்களை சீண்டியது ஆப்கானிஸ்தான்






உலக கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில், ஆப்கானிஸ்தானுக்கு எதிராக இலங்கை அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் போராடி வெற்றி பெற் றுள்ளது.

உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் 'ஏ' பிரிவில் டுனெடினில் நேற்றைய லீக் ஆட்டத்தில் 1996ஆம் ஆண்டு சம்பியனான இலங்கை அணி, அறிமுக அணியான ஆப்கானிஸ்தானை எதிர் கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் பந்து வீச முடிவு செய்தது. முதலில் களம் இறங்கிய ஆப்கான் அணி வீரர் கள் அகமதி, மங்கல் தனது ஆட்ட த்தை நிதானமாக விளையாட தொடங்கினர்.

8.1வது ஓவரில் மங்கல் 30 பந்தில் 10 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் மத்யூஸ் பந்து வீச்சில் விக்கெட்டை இழந்தார். இதனால் ஆப்கானிஸ்தான் அணி தனது 9 வது ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 38 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

9.4 ஓவரில் அகமதி 24 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழக்க, ஷென்வாரி, ஸ்டானிக்ஜாய் இருவரும் ஜோடி சேர்ந்தனர், நிதானமாக விளையாடி ஓட்டங்களை உயர்த்தினர்.

ஸ்டானிக்ஜாய் 54 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையிலும், ஷென்வாரி 38 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து விக்கெட்டுகள் பறிபோக, 49.4 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 232 ஓட்டங்களை ஆப்கானிஸ்தான் எடுத்தது.

233 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு, முதல் பந்திலேயே ஆப்கானிஸ்தான் அதிர்ச்சி அளித்தது.

திரிமன்னே ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழக்க, அடுத்த ஓவரில் டில்ஷான் விழ, 6ஆவது ஓவரில் சங்கக்காரவும் வெளியேறினார்.

கருணரத்னே 23 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க மறுமுனையில் ஜெயவர்த்தன பொறுப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்தார்.

41ஆவது ஓவரில் மத்யூஸ் 44 ஓட்டங்களுக்கு வீழ்ந்தார். ஜெயவர்த்தன 118 பந்துகளில் தனது 19ஆவது ஒருநாள் சதத்தை எட்டினார்.

52 பந்துகளில் 55 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஜெயவர்த்தன 100 ஓட்டங்களில் ஆட்டமிழக்க ஆட்டம் பரபரப்பான கட்டத்தை எட்டியது.

களத்தில் இருந்த பெரேரா, மெண்டிஸ் ஜோடி தேவைக்கேற்ப அதிரடியாக விளையாடினர், முடிவில் 48.2 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 236 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சதம் அடித்த இலங்கை அணி மஹேல ஜெயவர்த்தன தெரிவானார். (க)

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

இலங்கை (48.2 ஓவர்கள்) 236/6

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஜெயவர்த்தன | 100* | 120 |
| பெரேரா | 47 | 26 |
| மத்யூஸ் | 44 | 81 |
| கருணாரத்ன | 23 | 32 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

ஆப்கானிஸ்தான் (49.4 ஓவர்கள்) 232

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஸ்டானிஸ்காய் | 54 | 57 |
| ஷென்வாரி | 38 | 70 |
| அஷ்ரப் | 28 | 32 |
| அகமதி | 24 | 23 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

ஆப்கானிஸ்தான் பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஹசன் | 09 | 0 | 45 | 3 |
| ஸ்தரன் | 09 | 0 | 44 | 1 |
| ஷபூர் ஸ்தரன் | 10 | 1 | 48 | 1 |
| நபி | 5.2 | 0 | 28 | 0 |

ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

இலங்கை பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| மலிங்க | 9.4 | 1 | 41 | 3 |
| மத்யூஸ் | 07 | 0 | 41 | 3 |
| லக்மல் | 10 | 1 | 36 | 2 |
| ஹேரத் | 10 | 0 | 41 | 1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாபிரிக்க அணி படுதோல்வி

# உலகக் கிண்ண வரலாற்றை மாற்றியது இந்தியா

உலகக் கிண்ண வரலாற்றில் இந்திய அணி, தென்னாபிரிக்க அணியை முதல் தடவையாக வீழ்த்தி தனது வரலாற்றை மாற்றிக் காட்டியது.

இப்போட்டியில் இந்திய அணி தென்னாபிரிக்க அணியை 130 ஓட்டங்களால் அபாரமாக வெற்றி பெற்றது.

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் அவுஸ்திரேலிய - நியூசிலாந்து நாடுகளில் நடைபெற்று வருகின்றன.


இதன் 13ஆவது லீக் போட்டி குழு பியைச் சேர்ந்த இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று மெல்போர்னில் நடைபெற்றது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தென்னாபிரிக்காவின் வேகப் புயல்களான ஸ்ரெய்ன், மோர்கல், பிலாண்டர் ஆகியோரின் வேகத்துக்கு ஈடுகொடுத்த தவானின் துடுப்பாட்டத்துக்கு, ஹோலி, ரஹானே பங்களிப்புச் செய்ய இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக் களை இழந்து 307 ஓட்டங்களை எடுத்தது.



ஜே.பி.டுமினியை ஆட்டமிழக்கச் செய்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அஸ்வின்





துடுப்பாட்டத்தில் தவான் 137, ரஹானே 79, ஹோலி 46 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் மோர்கல் 2, ஸ்ரெய்ன், தாஹிர், பார்னெல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

308 ஓட்டங்கள் என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு ஆரம்ப வீரர்கள் (டி ஹொக் 07, அம்லா 22) பங்களிப்புச் செய்யாத போதிலும்,

தொடர்ந்து களமிறங்கிய டு பிளசிஸ் - டி வில்லியர்ஸ் இணை தமக்கிடையில் இணைப்பாட்டத்தை கட்டியெழுப்பி அணியை பலப்படுத்திக் கொண்டிருக்கையில் (68) டி வில்லியர்ஸ் 30, டு பிளசிஸ் 55 என அடுத்தடுத்து வெளியேற தென்னாபிரிக்கா தடுமாற்றத்துக்குள்ளானது.

தொடர்ந்து துடுப்பாட வந்தவர்களில் டேவிட் மில்லரைத் (22) தவிர ஏனையவர்கள் பிரகாசிக்காமல் போக தென்னாபிரிக்க அணியால் 40.2 ஓவர்கள் வரையே தாக்குப் பிடித்து ஆடி 177 ஓட்டங்களையே பெற முடிந்தது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின் 3, சமி, மோகித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக இந்திய அணிக்கு சதமடித்து கைகொடுத்த தவான் தெரிவானார்.

## விசுவமடுப்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்படுகொலை இப்பொழுதும் தொடர்ந்து நடைபெறுவதாக நான் கூறவில்லை. ஆனால் இனப் படுகொலை ஒன்று இடம்பெற்றது.

இதனால் தமிழ் மக்களுடைய காணிகள், மொழி, கலாசாரம், வதிவிடம், அரசியல் அதிகாரம் இப்படியாக எல்லாம் பறிக்கப்பட்டுள்ளது.

என்னுடைய கணக்கின்படி இறுதிக் கட்டப்போர் நடைபெற்ற எட்டு மாதங்களில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 மக்கள் காணாமல் போயுள்ளனர். அவர்கள் எங்கே என்று தெரியவில்லை.

அவர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று இரண்டு வாரங்களுக்கு முன்னர் நான் கேள்விப்பட்டேன். விசுவமடுப் பகுதியில் போர் நடைபெற்ற காலப் பகுதியில் சுமார் 30 ஆயிரம் தொடக்கம் 35 ஆயிரம் வரையான சடலங்கள் இருந்துள்ளன.

இப்படியாக மக்கள் தொகையாக கொலை செய்யப்பட்டமை இன அழிப்பாகும்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் செயற்படுத்தும் முறைமைகள் தமிழருடைய உரிமைகளை அழித்து அவர்களை ஒட்டுண்ணிகளாக வைத்திருக்கவே முயற்சித்தன.

எந்த உரிமைகளும் வழங்கப்படவில்லை. அதனை கேட்டுப் பெற முயற்சித்த போது ஆயுதம் கொண்டு அடக்கினார்கள். இப்படியான நிலையில் புதிய அரசாங்கத்தின் மீது பெரிய எதிர்பார்ப்புடன் இருக்கின்றோம்.

ஐ.நா விசாரணை பிற்போடப்பட்டமை துரதிர்ஷ்டவசமானதாக இருக்கின்றது. இப்போர்க்குற்றம் ஒரு நாட்டைப் பற்றியதல்ல. இதன் மூலம் அனைத்து உலகுக்கும் நல்ல பாடம் கற்பிக்கவும் எச்சரிக்கவும் முடியும்.

செப்ரெம்பர் மாதம் இவ்விசாரணை தடையில்லாமல் நடைபெறும் என ஐ.நா உறுதியளித்துள்ளது.

இந்தக்காலப்பகுதியில் அவ்அறிக்கையை மேலும் பலப்படுத்த ஐ.நா ஆணையாளர் முயற்சிப்பார் என நினைக்கின்றோம்.

உள்ளக விசாரணை என்பது தாங்களாக செய்வதால் அதில் இதுவரை எதையும் காணவில்லை எனவும் அவர் கூறினார். (எ-1)

## திஸ்ஸவின்...

அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது கட்சியின் தீர்மானத்தை மீறி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்சவிற்கு ஆதரவு வழங்கியதே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக் குழு முன்னெடுத்த விசாரணைகளுக்கமைய திஸ்ஸ அத்நாயக்கவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்ய தீர்மானித்ததாக அந்தக் கட்சியின் உள்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த தீர்மானத்தை திஸ்ஸ அத்தநாயக்கவிற்கு உத்தியோகபூர்வமாக கடிதம் மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (எ-1)

## இலங்கைக்கான...

தூதுவராக பணியாற்றிய மிச்சேல் ஜே சிசன் கடந்த ஆண்டு இறுதியில் ஐ.நாவுக்கான துணைத் தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து, இலங்கைக்கான தூதுவர் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்பட வில்லை.

இந்நிலையில், இலங்கையுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முனையும் அமெரிக்கா, முக்கிய இராஜதந்திரி ஒருவரை இந்தப் பதவிக்கு நியமிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கமைய தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலுக்கு அடுத்த நிலையிலுள்ள அதுல் கெசாப் கொழும்புக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக இத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் மூத்த அதிகாரிகளில் ஒருவரான அதுல் கெசாப், அண்மையில் நிஷா தேசாய் பிஸ்வாலுடன் கொழும்பு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## வீரவன்சவின்...

ஸார் தெரிவித்தனர்.

தனது இராஜதந்திர கடவுச்சீட்டில் போலியான தகவல்களை வழங்கியதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## புதிய அமைச்சரவையில்...

களின் எண்ணிக்கை 30 ஆகவும் வரையறுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் யோசனை முனவைத்துள்ளனர்.

இதனடிப்படையில் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை அமைச்சுக்களுக்கான துறைகள் தொடர்பான விடயங்கள் தெளிவாக உள்ளடக்கப்பட உள்ளது. (எ-1)

## சுதந்திரதின...

இதில் 1981ஆம் ஆண்டு படையினரின் அணிவகுப்பு ஒன்றில் எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் படுகொலை செய்யப்பட்டமை போன்றதொரு தாக்குதல் இடம் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஆயினும், இத்திட்டத்தின் இலக்கு மற்றும் பின்னணிகள் தொடர்பில் இந்த எச்சரிக்கையில் எதுவும் கூறப்படவில்லை.

இதையடுத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடந்த கூட்டத்தில் இத்தகைய தாக்குதல் முயற்சிகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

சுதந்திரதின நிகழ்வில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறாமல இருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்க வட்டாரம் ஒன்று தெரிவித்தது. இந்த புலனாய்வுத் தகவல் நம்பகமாகத் தோன்றுவதாக குறிப்பிட்ட அரசாங்க வட்டாரம், அது தொடர்பில் மேலும் விரிவாகக் கூறு மறுத்துவிட்டது.

அதேவேளை, இந்தத் தாக்குதல் எச்சரிக்கை கிடைக்க முன்னரே, சுதந்திரதின நிகழ்வுகளை எளிமையாக நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்திருந்தார் என்று இந்த ஊடகம் மேலும் தகவல் வெளியிட்டுள்ளது. (எ-1)

## கல்வியமைச்சர்...

அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப கூடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இதனையடுத்து இந்திய உதவி தூதரகம் மூலம் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பமையத்தை திறந்து வைப்பதோடு கோப்பாய் தேசிய கல்லூரி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றும் குறித்த கல்லூரியில் நடைபெறவுள்ளது.

27 ஆம் திகதியன்று காலை 9.00 மணிக்கு இளவாலை சென் கென்றீஸ் கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்ப கூடங்களை திறந்து வைக்கவுள்ளார்.

இதனையடுத்து மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தேசிய பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளதோடு இந்த கலந்துரையாடலில் வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாண அமைச்சர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் டக்ளஸ் நாணயக்கார, மேலதிக செயலாளர், தேசிய பாடசாலைகளின் உதவிக் கல்வி பணிப்பாளர் ஏ.எல்.சிராஜ், தமிழ் பிரிவு பணிப்பாளர் எஸ்.முரளிதரன், இராஜாங்க கல்வி அமைச்சின் கல்வி பணிப்பாளர் எம்.ரெங்கராஜ் உட்பட அமைச்சின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.

# FRENCH CLASSES



Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் கற்கிறார்கள்...
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)
இதுவரையில் எமது ஆசிரியரிடம் 895 பேர் கற்று சென்றுள்ளனர்
Register now : 0779 789 456 / 021 320 2973 (C-216)

ஆரம்பம்: 28.02.15 @2pm No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 28.02.15 @3.30pm No.181, 1st Floor, Main Street, நெல்லியடி.
சாவகச்சேரியில் விரைவில் எம் கிளை



# V2 Travels and Tours

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்
அனைத்து நாடுகளிற்குமான வீசா ஆலோசனைகள், online,விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்
கட்டார்,மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

யாழ்ப்பாணம் 49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால் 0773867257
நெல்லியடி மூடக்காட்டுச்சந்தி 0776699892 (8799)
வல்வெட்டித்துறை யாழ்வீதி - வல்வெட்டி 0776697960

- மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
- எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்



# வெளிவந்துவிட்டது

க/பொ/த உயர்தர கடந்த கால வினா விடை (PastPaper)
2014 உள்ளடங்கலாக
✦ 15%- 20% வரை விசேட விலைக்கழிவு
தரம் 10 விஞ்ஞானம் வெளிவந்துவிட்டது
கலாநிதி ஆ.யோகராஜா லோயல் அச்சகம்
யாழ்.புத்தகசாலை
305, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
T.P:0214545552, 0778349507 (C-238)



வெளிவந்து விற்பனையாகிறது !
நாடளாவரீதியில் 12 முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

# யாழ் எக்ஸ்பிரஸ்

தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5 வரை மாணவர்களுக்கு முதலாம் தவணை 12 மாதிரி வினாத்தாள்கள் விடையுடன்
தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம் ஆகிய பாடங்களின் 12 வினாத்தாள்கள்
விற்பனையாளர்கள், பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும். (C-231)
வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
இல. 10-1/5 ( Trust Complex Sea Street) முதலாம் மாடி, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13. தொ.பே : 077 6258778
விலை : தரம் 1, 2, 3 - 140/- தரம் 4, 5 - 150/-


## ஈழம்...

ஏற்றுக்கொள்ள முடியாது என பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக் காட்சியொன்றிற்கு அவர்வழங்கிய விசேட செவ்வியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் 2005-ம் ஆண்டு தேர்தலில் இரகசிய ஒப்பந்தத்தினூடாகவும் பாரிய தொகை நிதியை வழங்கி தமிழ் மக்கள் வாக்களிப்பதை நிறுத்தி என்னை தோற்கடித்தார்கள்.

அது மாத்திரமன்றி எமது தரப்பினர்களில் உள்ள ஜெனரல் சரத் பொன்சேகா. முன்னைய ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க ஆகியோரை கொலை செய்ய விடுதலைப் புலிகளே முயற்சித்தனர்.

எனவே, அவ்வாறானதொரு நிலைமையில் விடுதலைப் புலிகளை மீள உருவாக்கவேண்டுமென்ற தேவைஎமக்குக்கிடையாது. அதற்கு ஒரு போதும்நாம்இடமளிக்கப்போவதில்லை.

தேசிய சுதந்திர தின விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியது. இது நல்லிணக்கத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

சர்வதேச நாடுகளுடன் இணைந்து செயற்படுவதன்மூலமே நாட்டின் பொருளாதாரத்தை சிறப்பான முறையில் முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் புதிய அரசியல் முறையை ஏற்படுத்துவது எமக்குள்ள பாரிய சவாலாகும். இந்நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டி நல்லாட்சியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் நோக்கிலேயே நாம் ஆட்சிபீடம் ஏறினோம்.

குறித்த இலக்குகளை பொறுமையுடன் கையாண்டு வெற்றிகொள்ளவேண்டும்.

அத்தோடு சர்வாதிகார ஊழல் மோசடிகளுடனான ராஜபகஷ ஆட்சியை தோல்வியடையச் செய்து நாட்டின் புதிய அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்குவது முக்கிய குறிக்கோளாகும்.

அதற்காக வேண்டியே மக்கள் வரம் எமக்கு கிடைக்கப்பெற்றது என்றார். (எ-1)

## ஐ.நா...

செல்கிறார்.

அவர்மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் ராட் அல் ஹூசைனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று முன்னதாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் போது யுத் தக் குற்றங்கள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்துவதன்பொருட்டும், அதற்கு ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வது குறித்தும் அவதானம் செலுத்தப் படும் என்று தெரிவிக்கப் பட்டுள் ளது.

ஏற்கனவே இலங்கை மீதான சர்வதேச விசாரணை அறிக்கை ஒத்திவைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-1)

## புதுடில்லி...

தற்போது கற்கை நெறியை மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள், போராளிகள் மற்றும் பொதுமக்களைப் படுகொலை செய்ய உத்தரவிட்டவர் இவரே என்று குற்றம் சுமத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-1)


### தவறிவிட்டது

வில்வரத்தினம் பிரசன்னகுமார் ஆகிய எனது 802074905V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, பேர்சுடன் மானிப்பாய்க்கும் ஓட்டுமடத்துக்கும் இடையில் நேற்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (C-239)
தொ.பே:- 0774327225, 0778856718



### பதவிக்கான தேடல்

நீங்கள் தொழில் தேடுபவரா?
எமது சர்வதேச ரீதியில் 33 வருட காலமாக இயங்கிவரும் American நிறுவனத்தின் புதிய கிளைகள் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால் 07 வகையான பதவி வெற்றிடங்கள் உள்ளன.
O/L தமைமையுடன் இணையலாம் | தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
வயதெல்லை 18-28 | சம்பளம் 15,000/= - 18,000/=
தொடர்புகளுக்கு:-
0773366453, 0771882507, 0214545634 (C-240)



Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101 (C-230)



# கோலாகல திறப்பு விழா

SOLO movies
Video & Photo Studio
www.solomovies.net, www.solomovies.ch
போட்டோ & வீடியோ



நியூ லக்மி திருமண அழைப்பிதழ்கள்
New Luckme Wedding Card



203, Yarl Road (A9), Nunavil Center, Nunavil, CHAVAKACHCHERI, Tel: 021 227 11 66, Info line 077 558 99 55



Sekaran Graphic
Digital Printing (9589)
இப்பொழுது
203, யாழ் வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியிலும்
டிஜிற்றல் பனர் பிறிண்டிங்
டிஜிற்றல் பெயர்ப் பலகைகள்
டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
கச்சாய் வீதி, கொடிகாமம்



: 077 940 5802
021 205 0393


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org